71

ed by the Text Book Committee (vide Fort St. George Gazette)
Part 1 B Page 225 dated 8th April 1930

MODERN GEOGRAPHY

# MADURA DISTRICT

With History and Civics

நவீன பூகோள சாஸ்திரம்

# மதுரை ஜில்லா

(சரித்திரம், துரைத்தனம் சேர்க்கப்பெற்றது)

3633

6-JUL 1930

BY
K. M. VEERASAMY PILLAI

துரைத்தனத்தார் அங்கீகரித்தது

P. N. CHIDAMBARA MUDALIAR BROS.,
MADRAS & MADURA

) 1930 (Price As. 0-4-6

U. 21195
N30
12-1290

# நவீன பூகோள சாஸ்திரம்

# மதுரை ஜில்லா

(சரித்திரம். துரைத்தனம் சேர்க்கப்பெற்றுள)

OFFICE OF THE REGISTRAR
5 - JUL 1930
3627
915.48

K. M. வீராச்சாமிபிள்ளை

எழுதியது

துரைத்தனத்தார் அங்கீகரித்தது

மதுரை புக்ஸெல்லர்ஸ்,

பி. நா. சிதம்பர முதலியார் பிரதர்ஸ்,

வெளியிட்டது

ரிஜிஸ்டர் செய்தது] 1930 [விலை அணா 4½

121290

Prin'ed at the
VIVEKANANDA PRESS
MADURA, 1930.

# முகவுரை

இப்புஸ்தகம் தற்கால போதனுமுறைப்படி மாணுக்கர்கள் சுலபமாகக் கற்றுக்கொள்வதற்குத் தகுந்த நடையில் எழுதப்பட்டிருக்கிறது. இதில் பிளான் வரையும் விதத்தைக் காட்டியுள்ளபடி மாணுக்கர்களுக்கு உபாத்தியாயர்கள் கற்றுக்கொடுத்தால் மாணுக்கர்கள் சுலபமாய் அறிந்துகொள்வார்கள். உபாத்தியாயர்கள் முதலில் மாணுக்கர்களுக்கு இப்புஸ்தகத்தில் குறித்த பொதுவிஷயங்களான சூரியன், பூமி, சந்திரன், நீர் நிலப்பிரிவுகள், நக்ஷத்திரங்கள், கிராமவாழ்க்கை, கைத்தொழில்கள், இருப்புப்பாதை, வண்டிப்பாதை, வியாபாரம், அரசாட்சி முதலியவைகளை படங்களின் மூலமாக எழுதிக் கற்பித்ததின் பிறகு இஜ்ஜில்லாவைப்பற்றிப் போதிக்க வேண்டும். மேலும் இப்புஸ்தகத்தில் பெரியாற்றைப்பற்றி மற்ற புஸ்தகங்களைக்காட்டிலும் மிகவும் சுலபமாக விவரித்து பையன்கள் எளிதில் தெரிந்துகொள்ளும்படி எழுதப்பட்டிருக்கின்றன. பொது விஷயங்களைப்பற்றிக் கற்பிக்கும்போது பையன்களிடத்தில் சம்பாஷணை மூலமாக வருவித்து கற்பிக்க வேண்டும். பொது விஷயங்களைப்பற்றிக் கற்பித்தவுடன், அப்பாட விஷயமாக சில அப்பியாசங்கள் கொடுத்து, அதற்கு விடையை எழுதிக்கொண்டு வரும்படி செய்தால், பையன்கள் சுலபமாக பொது விஷயங்களைப்பற்றி அதிசீக்கிரத்தில் கற்றுக்கொள்வார்கள். ஆகையால் உபாத்தியாயர் முன்சொன்ன மாதிரி செய்து வரவேண்டும். ஜில்லாவின் படத்தைக்கொண்டு போதிக்கவேண்டும். இஜ்ஜில்லாவிலுள்ள தாலூக்காக்களைப் பற்றியும், முக்கிய பட்டணங்களையும் யாத்திரை ஸ்தலங்களை

யும் இன்னும் பல முக்கியமான விஷயங்களையும் குறித்து இப்புஸ்தகத்தில் எழுதப்பட்டுள்ளது. சில விஷயங்களுக்குத் தகுந்த பாடங்களையும் சேர்த்து இப்புஸ்தகத்தில் எழுதப் பட்டிருக்கிறது. படத்தைக்கொண்டு போதிப்பதே தற்கால முறை. மேலும் இப்புஸ்தகத்தில் சில பட்டணங்கள் (மதுரை, பெரியகுளம், நிலக்கோட்டை, திண்டுக்கல், பழநி) இவை களுக்கு பெயர்கள் வரத்தகுந்த காரணங்களை பையன்கள் சுலப மாய் வாசிக்கும் நடையில் எழுதப்பட்டிருக்கின்றன. இஜ்ஜில் லாவின் சம்பந்தமான பல பூர்வீக கதைகளையும் இப்புஸ்தகத் தில் எழுதப்பட்டுள்ளன. விடுமுறை நாட்களில் மாணுக்கர் களை வெளியில் பக்கத்திலுள்ள கிராமங்களுக்குக் கூட்டிக் கொண்டுபோய், அங்குள்ள பொருள்களைப்பற்றியும், நிலத்தின் தன்மையைப்பற்றியும் அங்கு நடக்கும் தொழில்களைப்பற்றி யும், பேசும் பாஷைகள், நடை உடை பாவனைகளையும் நேரில் காண்பித்துக்கற்பிப்பது மிகவும் நல்லது.


**கா. ம. வீராச்சாமி பிள்ளை**

# பொருளடக்கம்


| எண். | விஷயம் | பக்கம். |
|---|---|---|
| 1. | திசைகள். | 9 |
| 2. | ஸ்கேல் விபரம். | 11 |
| 3. | பிளான். | 13 |
| 4. | நக்ஷத்திரங்கள். | 17 |
| 5. | சூரியன், பூமி, சந்திரன். | 19 |
| 6. | பூமி. | 20 |
| 7. | சந்திரன். | 22 |
| 8. | கிராமமும் சுற்றுப்பக்கமும். | 23 |
| 9. | கைத்தொழிலின் விபரம். | 26 |
| 10. | போக்குவரவுக்குரிய மார்க்கங்கள். | 31 |
| 11. | ஜனங்களும், பாஷையும் மதமும். | 33 |
| 12. | வியாபாரம். | 33 |
| 13. | அரசாட்சி. | 34 |
| 14. | நீர் நிலப்பிரிவுகள். | 35 |
| 15. | ஜில்லா. | 41 |
| 16. | மதுரை ஜில்லா. | 42 |
| 17. | இருக்குமிடம், பரிமாணம். | 42 |
| 18. | இயற்கை அமைப்பு. | 44 |
| 19. | மலைகளும் நதிகளும். | 44 |
| 20. | வாய்க்கால்களும், ஏரிகளும். | 49 |
| 21. | சீதோஷ்ண ஸ்திதி. | 52 |
| 22. | விளைபொருள்கள். | 53 |

23. கைத்தொழில், ஏற்றுமதி, இறக்குமதி. 54
24. போக்குவரவுக்குரிய மார்க்கங்கள். 55
25. ஜனங்கள், மதங்கள், பாஷைகள். 57
26. தாலூக்காக்களும், அதன் பட்டணங்களும். 59
I. மதுரைத் தாலூக்கா. 59
II. மேலூர்த்தாலூக்கா. 64
III. திருமங்கலம் தாலூக்கா. 66
IV. பெரியகுளம் தாலூக்கா. 68
V. திண்டுக்கல் தாலூக்கா. 71
VI. பழநித்தாலூக்கா. 74
VII. நிலக்கோட்டைத்தாலூக்கா. 77
VIII. கொடைக்கானல் தாலூக்கா. 79
27. ஜில்லா சரித்திரம். 80
நாயக்கர்கள். 80
மங்கம்மாள். 89
பாண்டியர்கள். 91
மீனாக்ஷியம்மாள். 93
ஆங்கில அரசாட்சி. 94


# PHYSICAL
# MAP OF MADURA DISTRICT.



K. S. Naidu.

# மதுரை ஜில்லா


ஸ்கேல் 1 அங்குலம்-24 மைல்



# நவீன
# பூகோள சாஸ்திரம்

## 1. திசைகள்

பிள்ளைகளே! நீங்கள் காலையில் படுக்கையைவிட்டு எழுந்தவுடன் வானம் எப்படி இருக்கிறது? சற்று மந்தார மாகவும் வெளிச்சமாகவும் இருக்கிறதல்லவா? பின்பு சற்று நேரம் செல்லச் செல்ல எத்திசையில் என்ன பார்க்கிறீர்கள்? ஆகாயத்தில் நெருப்புபோன்ற பந்துவடிவமானதைப் பார்க் கிறீர்களல்லவா? அத்திசையைத்தான் சூரியன் உதிக்கும்பக்க மென்று சொல்லுகிறோம். எந்தத்திசையில் சூரியன் மறை படுகிறதோ, அந்தத் திசையைச் சூரியன் அஸ்தமிக்கும் திசை என்கிறோம். சூரியன் புறப்படும் பக்கம் (உதிக்கும் பக்கம்) **கிழக்கென்றும்,** சூரியன் மறையும் பக்கம் (அஸ்தமிக்கும் பக்கம்) **மேற்கு** என்றும் சொல்லுகிறோம். நீங்கள் சூரியன் உதிக்கும் பக்கத்தை நோக்கி நின்று, உங்களுடைய இரு கரங்களையும் நீட்ட வேண்டும். அப்பொழுது உங்களுடைய வலதுகை எப்பக்கமிருக்கிறதோ, அப்பக்கம் **தெற்கு** என்றும், இடதுகை எப்பக்கமிருக்கிறதோ, அப்பக்கம் **வடக்கு** என்றும் பெயர்.




நீங்கள் வசிக்கும் இஜ்ஜில்லாவைப்பற்றி பின்னால் படிக்கப் போகிறீர்களல்லவா? அப்போது அஜ்ஜில்லா படத்தின் திசைகளை எவ்வாறு அறியலாமென்பதை இனி அறிவோம். தாலூக்காப்படம், ஜில்லாப்படம், இராஜதானிப்படம், இந்தியா தேசப்படம், வேறு எவ்விதத் தேசப் படமாயிருந்தாலும், அப் படத்தின் தலைப்பக்கம் வடக்கென்றும், அடிப்பக்கம் தெற்கு என்றும், நாம் படத்தை நோக்கி நின்று இருகரங்களையும் நீட்டி நிற்கும், வலது கை எப்பக்கமிருக்கிறதோ அப்பக்கம்

கிழக்கென்றும், இடது கைப்பக்கம் மேற்கென்றும் தெரிந்து கொள்ளவேண்டும். மேற்குறித்துள்ள திசைகளை நாம் எளிதில் பகலில் தெரிந்துகொள்ளலாம். இராக்காலங்களில் சமுத்திரத்தில் செல்லும் மாலுமிகள் காம்பஸ் என்னும் காந்தக்





கருவியைக்கொண்டு திசைகளைத் தெரிந்துகொள்வார்கள். இக் கருவி வட்டமாயிருக்கும். இக் கருவியின் மேல்தட்டில் திசைகளின் பெயர்கள் குறித்திருக்கும். தட்டின் மத்தியில் எல்லாப் பக்கங்களிலும் திரும்பக்கூடிய ஒருவிதமான ஊசி ஒன்று வைக்கப்பட்டிருக்கிறது.

இந்த ஊசி, காம்பஸ் எந்தப் பக்கத்திலிருந்தபோதிலும் வடதிசையை நோக்கியே திரும்பிநிற்கும். கப்பலில் செல்லும் மாலுமிகள், வடக்கு திக்கைத் தெரிந்துகொண்டு, முன் சொல்லியபடி மற்றத்திக்குகளையும் அறிந்துகொள்வார்கள்.


## 2. ஸ்கேல் விபரம்

ஸ்கேல் என்றால் அளவு என்று பெயர். நாம் ஓர் அறையின் உருவத்தை வரைய வேண்டுமென வைத்துக் கொள்வோம். அவ்வறையின் நீளம் 20 அடி, அகலம் 15 அடி என்று வைத்துக்கொள். கற்பலகையின் நீளமும் அகலமும் மேற்கூறிய அளவுக்குக் குறைவாயிருப்பதால் அவ் அளவில் கற்பலகையில் எழுதமுடியாது. ஆகையால், கற்பலகையின் நீள அகலத்திற்குத் தக்கபடி அறையின் நீள அகலத்தின்




அளவை, ஓரடியை ஓரங்குலமாகவாவது அல்லது இரண்டு அங்குலமாகவாவது வைத்துக்கொண்டு, அறையின் நீளம் 20 அடியை, 20 அங்குலங்களாகவும் அல்லது 10 அங்குலங்களாகவும், அகலம் 15 அடியை 15 அங்குலங்களாகவும் அல்லது $7\frac{1}{2}$ அங்குலங்களாகவும் வைத்துக் கோடு இழுக்க வேண்டும். 20 அங்குல முள்ள கோட்டை முதலில் கற்பலகையில் இழுத்துக்கொண்டு 15 அங்குளமுள்ளகோட்டை மேலே இழுக்கப்பட்ட கோட்டுக்கு நேர் கோணமாக இழுத்து, உருவத்தைப் பூர்த்தி செய்யவேண்டும். இவ்வுருவத்தின் விஸ்தீரணம் எழுதினவர்களுக்கு மட்டும் தெரியும். மற்றவர்களுக்கு, இவ்வுருவத்தின் பரிமாணம் தெரியாததால், இவ்வுருவத்தின்கீழ் ஓரடிக்கு ஓர் அங்குலம் என்று எழுதவேண்டும். (ஸ்கேல் 1 அடி = 1 அங்) அடிக்கு அங்குலந்தான் எடுத்துக்கொள்ளவேண்டுமென்று சொல்லப்படவில்லை. கெஜத்தை அடியாகவும், அங்குலமாகவும், மைலை கெஜமாகவும், அல்லது அடியாகவும், அல்லது அங்குலமாகவும், எனப் பலவாருக அளவுகளை நாம் எடுத்துக்கொள்ளலாம். இவ்வாறு நாம் எடுத்துக்கொள்ளும் அளவுக்கு ஸ்கேல் என்று பெயர்.


## 3. பிளான்



பிள்ளைகளே,

நீங்கள் இதுவரையில், திசைகள், ஸ்கேல் இவைகளின் விபரங்களை படித்திருக்கிறீர்களல்லவா? இனிமேல் பிளான் என்பது என்ன? என்பது கட்டிடத்தின் உருவத்தையும், அதன் அளவுகளையும், அதன் மேல் வைத்திருக்கும் வஸ்துக்களின் இடங்களையும் காட்டுவதற்குப் பிளான் என்றுபெயர். பள்ளிக் கூடத்திலுள்ள கரும்பலகைகள் நாற்காலிகள்,

மேஜைகள், பெஞ்சுகள், முதலியவைகள் வியாபித்திருக்கு மிடம் ஆகிய, இவைகளின், நீளம் அகலம், கனம், அளவுகளைத் தெரிந்து, அதன்படி பிளான் வரையலாம். நீங்கள் நாள் தோறும் உபயோகப்படுத்தும் பென்ஸலின் பிளானைக் கீழே ஸ்கேலின்படி குறித்திருக்கும் படத்தைக் காணலாம்.





மேலே குறித்துள்ள படத்தைப் பாருங்கள். இது ஒரு பென்ஸல்படம். நீங்கள் ஒவ்வொருவரும் அவரவர்களுடைய கற்பலகைகளை எடுத்துக் கொள்ளுங்கள். அதில், நீங்கள் நாள்தோறும் உபயோகப்படுத்தும் காகிதப் பென்ஸலைச் சிலேட்டின் மத்தியில் வையுங்கள். அப்பென்ஸலை வைத்து அதைச்சுற்றிச் சிலேட்டுக் குச்சியினுல் கோடு இழுங்கள். அதன் பின் அக்காகித பென்ஸலை எடுத்து விட்டுப் பார்த்தால், அக்காகிதப் பென்ஸலின் உருவம் தெரியும். இதைப்போன்ற மற்ற பொருள்களுக்கும், கட்டிடங்களுக்கும், கதவுகளுக்கும், ஜன்னல்களுக்கும், புஸ்தகங்களுக்கும் ஸ்கேலின்படி பிளான் வரையலாம். படமென்று எதற்குப் பெயர்? தெரு, கிராமம், தாலூக்கா, ஜில்லா, இராஜதானி முதலியவைகளின் பிளானுக்குப் பூகோளசாஸ்திரத்தில் படமென்று பெயர். ஒரு தேசத்தின் படத்தில் ஸ்கேலின்படி அத்தேசத்திலுள்ள ஏரிகள், நதிகள், மலைகள் முதலியவை வியாபித்த இடங்களைக் காட்டும். கிராமத்தைப் பற்றியாவது அல்லது ஜில்லாவைப்பற்றியாவது நாம் நன்ருய்த் தெரிந்துகொள்ள வேண்டுமானுல் அவைகளின் படம்

வேண்டும். அப்படத்தைக்கொண்டு, மலை, ஏரி, நதி, இருப்புப்பாதை, குளம் முதலியவைகளை அறிவதுடன், ஒவ்வொரு ஊர்களிலுமுள்ள நிலங்களின் தன்மைகளையும் நன்ருய்த் தெரிந்துகொள்ள வேண்டும். பிறகு அவ்வூர்களில் பயிர் செய்யப்படும் நன்செய், புன்செய், தான்யங்களைத் தெரிந்துகொள்ளவேண்டும். இன்னும் ஒவ்வொரு ஊர்களிலும் செய்யும் தொழில்களைப்பற்றியும் பேசும் பாஷையைப் பற்றியும், உடுக்கும் உடைகளைப்பற்றியும், சாப்பிடும் ஆகாரங்களைப்பற்றியும், அவ்வூர்களிலுள்ளவர்களின் பழக்க வழக்கங்களையும் தெரிந்துகொள்ளவேண்டும். இவ்விஷயங்களைக் கூறும் புஸ்தகத்திற்குப் பூகோள சாஸ்திரமென்று பெயர்.

கிராமத்திலுள்ள விஷயங்களைக்கூறும் புஸ்தகத்திற்குக் கிராம பூகோள சாஸ்திரமென்றும், ஜில்லாவிலுள்ள விஷயங்களைக்கூறும் புஸ்தகத்திற்கு ஜில்லா பூகோள சாஸ்திரம் என்றும், இராஜதானியிலுள்ள விஷயங்களைக்கூறும் புஸ்தகத்திற்கு இராஜதானிப் பூகோள சாஸ்திரமென்றும் பெயர். இனி நாம் வசிக்கும் பூமியைப்பற்றிப் படிப்போம்.


நாம் வசிக்கும் இப்பூமியானது நிலமும் நீரும் சேர்ந்துள்ள பாகம். ஆகாயத்தில் தோன்றும் சூரியன், சந்திரன் நக்ஷத்திரங்கள், இவைகளின் உருவம் எவ்வகைப்பட்டதென்று நாம் அறிந்துகொள்ளலாம். பூமியின் வடிவத்தை அம்மாதிரி தெரிந்து கொள்ளமுடியாது. ஆனல் வேறுவிதத்தில் தெரிந்துகொள்ளலாம். நாம் பார்க்கக்கூடிய ஒவ்வொரு வஸ்துக்களின் உருவங்களை, அதனுடைய நிழலால் அறிந்து



கொள்ளலாமென்பது உங்களுக்குத் தெரிந்த விஷயம். அது போல் சந்திரகிரகணம் உண்டாகும் சமயத்தில் பூமியின் நிழல் சந்திரன்மேல் விழும்போது வட்டவடிவமாயிருக்கிற சந்திரன் மறைகிறது. ஆகையால் பூமியும் உருண்டைதா னென்று எண்ணலாம். மேலும் ஆகாயத்தில் தோன்றுகிற சூரியன், சந்திரன், நக்ஷத்திரங்கள் வட்டவடிவமாய் இருப்ப தால் பூமியும் வட்டவடிவமாய்த் தானிருக்கவேண்டுமென் றும் எண்ணலாம்.

இன்னும், வேறு உதாரணங்களினால் பூமி உருண்டை என்பதை விளக்கலாம். அதாவது, ஒரு மனிதன் சமுத்தி ரக்கரையில் நின்றுகொண்டு, கரையிலிருந்து செல்லுகிற கப்பலைப் பார்த்துக்கொண்டேயிருந்தால், கொஞ்சம் கொஞ்ச மாக மறைந்து கடைசியாக முழுதும் மறைந்து கண்ணுக்குத் தெரியாமல் போகிறது. மறைவதற்குக் காரணமென்னவென் றால், கப்பல் போகும் இடம் மறைந்திருக்கவேண்டும். ஆகை யால் பூமி வட்டவடிவமாய் இருக்கவேண்டுமென்று எண்ண


லாம். மேலும் இன்னொரு உதாரணத்தினாலும் பூமி வட்ட வடிவமானதென்பதை அறியலாம். அதாவது ஒருவன் ஒரு வளைந்த பாலத்தின் ஒரு முனையில் நின்றுகொண்டு பாலத்தின் வழியாகச்செல்லும், மனிதனைப் பார்த்துக்கொண்டிருந்தால், அவன் செல்லச்செல்ல அவன் உருவம் முழுவதும் மறைந்து கண்ணுக்குத்தெரியாமல் மறைந்துவிடுகிறான் ஆகையால் பூமியும் இவ்விதமாகத்தான் உருண்டையாயிருக்க வேண்டுமென்று எண்ணலாம். இன்னும் சில உதாரணங்களால் பூமி உருண்டை வடிவமுள்ளதென்பதை விளக்கலாம்.



## 4. நக்ஷத்திரங்கள்

பிள்ளைகளே, நீங்கள் நாள்தோறும் ஆகாயத்தில்தோன்றும் நக்ஷத்திரங்களைப் பார்த்திருப்பீர்களல்லவா? அவைகளை நீங்கள் வெள்ளியென்று சொல்லுவீர்கள். நீங்கள் ஆகாயத்தில்

இரவில் நக்ஷத்திரங்களை எந்த நேரங்களில், எவ்விடங்களில் காண்கிறீர்களோ, அவ்விடங்களில் முன் பார்த்த நேரத்திலேயே அந்நக்ஷத்திரங்களை அடுத்த நாளிலும் பார்ப்பீர்கள். உங்களுடைய பார்வைக்கு ஆகாயத்தில் தோன்றும் நக்ஷத்திரங்கள் மேற்கே நகருவதாகத் தோன்றும். உண்மையாக நக்ஷத்திரங்கள் நகரவில்லை. நக்ஷத்திரக்கூட்டங்களின் உருவமும் மாறவில்லை. அசுவணி, பரணி, கிருத்திகை முதலிய நக்ஷத்திரங்கள் பலவித உருவங்களுடனிருக்கின்றன.



பிள்ளைகளே, பூமியானது சுற்றுகிறது என்று சொன்னால் உங்களுக்கு ஓர் வியப்பு உண்டாகலாம். பூமியானது சுற்றிக்கொண்டு வந்தால், நீங்கள் இருக்கும் வீடுகளும், வாசிக்கும் பள்ளிக்கூடங்களும் விழுந்து விடுமென்று நீங்கள் எண்ணலாம். அதன் விபரத்தைப் பின் வருமாறு நீங்கள் தெரிந்துகொள்ளலாம். அதாவது Pole நக்ஷத்திரத்திற்கு

நேரில் ஒருவன் நின்று பார்த்தால், சூரியன் உதயமாகும் திசை வலது பக்கமென்றும், அஸ்தமிக்கும் பக்கம் இடது பக்கமென்றும் தெரியும். இவ்விதம் வரும்படியாகப் பூமியானது மேற்கிலிருந்து கிழக்குமுகமாகச் சுற்றுகிறது. உதாரணமாக, நாம் புகைவண்டி ஏறிப்பிரயாணம் போகும்பொழுது இரண்டு பக்கங்களிலுமுள்ள மரங்கள், செடிகள், வீடுகள், மலைகள் முதலியவைகள் நமக்கு எதிர்திசையை நோக்கி வேகமாய்ப் போகிறதுபோல் தோன்றும். உண்மையில் அவைகள் போகவில்லை. புகைவண்டிமாத்திரம் செல்லுகிறது. இப்பூமியானது ஒருமணி நேரத்தில் சுமார் 1000, மைல் விதம் மேற்குத்திசையிலிருந்து கிழக்குமுகமாய்ச் சூரியனைச் சுற்றுகிறது. இப்படி பூமியானது சுற்றுவதால், பூமியோடு செல்லும் நமக்குச் சூரியன் (எதிர்பக்கமாய்) கிழக்கிலிருந்து மேற்கு முகமாய்ப்போவதாகத் தெரிகிறது. அது உண்மையல்ல. நாம் வசிக்கும் இப்பூமிக்கு எல்லாப் பொருள்களையும் இழுத்துக்கொள்ளும் வல்லமை உண்டு. அவ்வல்லமைக்கு ஆகர்ஷணசக்தி என்று பெயர். இச்சக்தியின் உதவியால் நம்முடைய வீடு முதலியவைகள் விழாமலிருக்கின்றன.

## 5. சூரியன், பூமி, சந்திரன்

நமக்கு நாள்தோறும் பகலில் வெளிச்சம் கொடுப்பது சூரியன். இது ஓர் அக்கினிகோளம். இச்சூரியன் நமக்கு நாள்தோறும் பகலில் உஷ்ணமும் வெளிச்சமும் கொடுத்துக் கொண்டுவருகிறது. இவ்வெளிச்சத்தினால் நாம் ஒவ்வொரு பொருள்களையும் நன்றாய் அறியவும், பகலில் தொழில்கள் செய்யவும் இன்னும் மற்ற விஷயங்களுக்கும் அனுகூலப்


படுகின்றது. சூரியன் அஸ்தமித்தவுடன் நமக்கு இருட்டாகிவிடுகிறது.

சூரியன் நாள்தோறும் கிழக்கிலுதித்து, மாலையில் மேற்கில் அஸ்தமிக்கிறது. சூரியன் நாம் வசிக்கும் பூமியைக் காட்டிலும் 13 லக்ஷம் மடங்கு பெரியது. சூரியன் உருண்டை வடிவமுள்ளது. சூரியன் தன்னைத்தானே சுற்றிக் கொள்ளுகிறதேயொழிய மற்ற கிரகங்களைச் சுற்றுகிறதில்லை. நாம் வசிக்கும் பூமிக்குச் சற்றேறக்குறைய 10 கோடிமைல் தூரத்தில் சூரியன் இருக்கிறது. சூரியன் மிகவும் தூரத்திலிருப்பதால் நமது கண்ணுக்கு மிகச்சிறியதாகத் தோன்றுகிறது. சூரியனைப் பகலில் 12 மணிக்கு நீங்கள் பார்த்தால், உங்களுடைய கண்கள் கூசும். ஏனென்றால், சூரியன் மிகவும் உஷ்ணமாயிருப்பதால் இவ்விதம் கூசுதல் ஏற்படுகின்றது.

## 6. பூமி

நாம் வசிக்கும் இப்பூமியானது ஏறக்குறைய கிச்சிலிப் பழத்தைப்போல் உருண்டை வடிவமுள்ளது. பூமியின் சுற்றளவு 25000 மைல். இதன் குறுக்களவு 8000 மைல் உள்ளது. பூமிக்கு இரண்டுவித சலனங்கள் உண்டு. அதாவது பூமியானது தன்னைத்தானே சுற்றிக்கொள்வது ஒன்று. இரண்டாவது, தன்னைத்தானே சுற்றிக்கொண்டு சூரியனையும் சுற்றுகிறது. பூமி தன்னைத்தானே ஒரு தரம் சுற்றுவதற்கு ஒரு நாள் ஆகிறது (24 மணி நேரம்) இதற்குத் தினகதி என்று பெயர். பூமி சூரியனை ஒரு தடவைச் சுற்றிவர 365¼ நாட்கள் செல்லுகின்றன. இதற்கு வருஷகதி என்று

பெயர். பூமி தன்னைத்தானே சுற்றிக்கொண்டு சூரியனையும் சுற்றிக்கொண்டு வருவதால், பகலும், இரவும், வெப்பமும், குளிர்ச்சியும் உண்டாகின்றன. பூமி தன்னைத்தானே சுற்றிக் கொண்டு, சூரியனையும் சுற்றிக்கொண்டு வரும்பொழுது, அப்பூமியின், சூரியனுக்கு எதிராகவரும் பாதிப்பாகம் வெளிச்சமாகவும், மற்றைப் பாதிப்பாகம இருட்டாகவும் இருக்கிறது. பூமியின் வெளிச்சமான பாகத்தை பகல் என்றும், இருட்டாயுள்ள பாகத்தை இரவென்றும் தெரிந்து கொள்ளவேண்டும். பிள்ளைகளே நீங்கள் கீழே காட்டியுள்ள உதாரணத்தைக்கொண்டு நன்றாய் அறிந்துகொள்ளலாம்.




அதாவது, முதலில் நீங்கள், விளக்கைச்சூரியனாகவும், பந்தை பூமியாகவும் வைத்துக்கொள்ளுங்கள்: பிறகு ஒரு இருட்

டறைக்குள் விளக்கை ஏற்றிவைத்து, அதன் பக்கத்தில் பந்தை சுற்றினால் பந்து சுழலும்போது, விளக்கின் பக்கம் வரும்பாகம் வெளிச்சத்தையும், விளக்கின் வெளிச்சம் விழுகாத பாகம் இருட்டையும் அடைகின்றன. அதுபோல சூரிய வெளிச்சம் பூமியில் எந்தப்பாகத்தில் விழுகிறதோ, அப்பாகத்தைப் பகலென்றும் வெளிச்சம் விழுகாதபாகத்தை, இரவு என்றும் சொல்லுகிறோம். பந்தானது ஒரு முனையை ஆதாரமாகக்கொண்டு சுற்றிவருகிறது. பூமியானது ஒன்றினுடைய உதவியுமில்லாமல் அந்தரத்தில் சுற்றுகிறது. ஒரு பகலும் இரவும் சேர்ந்தது ஒருநாள்.

## 7. சந்திரன்

இது பூமியிலும் சிறியது. பிள்ளைகளே இராக்காலங்களில் உங்களுக்கு வெளிச்சம் கொடுப்பது எது? சந்திரன் பூமியைச்சுற்றும் கோளம். சந்திரன் ஒரு குளிர்ச்சியான




கோளம். சந்திரன் இரவு தோறும் வெளிச்சம் கொடுக்கிறதில்லை. சந்திரனுக்கு மூன்று சலனங்கள் உண்டு (சலனம்—அசைவு) அதாவது தன்னைத்தானே சுற்றிக்கொண்டு பூமியையும்சுற்றுகிறது. பூமியுடன் சேர்ந்து சூரியனையும்சுற்றி வருகிறது. பௌர்ணமி தினம் சந்திரன் இரவுமுழுதும் பிரகாசிக்கிறது. அமா

வாசை தினம் பிரகாசிப்பதேயில்லை. அமாவாசைக்குப் பிறகு சூர்யாஸ்தமன காலத்தில் வில் வளைவுபோல் சந்திரன் பிரகாசிக்கும். வளைந்த பாகத்தைப்பிறைச்சந்திரன் என்று சொல்லுகிறோம் முன் நிலா எந்தக்காலத்தில் உண்டாகிறதோ அந்தக்காலத்திற்குச் **சுக்கிலபக்ஷம்** என்றும், முன் இருட்டும் பின் நிலாவும் எந்தக்காலத்திலுண்டாகிறதோ, அந்தக்காலத்திற்குக் **கிருஷ்ணபக்ஷம்** என்றும் பெயர். சந்திரன் பூமியை ஒரு தரம் சுற்ற 29 நாள் ஆகிறது. பௌர்ணமி தினத்திலிருந்து கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்து 15ம் நாள் சந்திரன் பூராவும் தெரிகிறதில்லை. சந்திரன் பூராவும் தெரியாமலிருக்கும் தினத்தை அமாவாசை என்கிறோம். பௌர்ணமி தினத்திலிருந்து சந்திரனின் உருவம் குறைவதாகக்காணப்படும் நாட்களை தேய்பிறை (கிருஷ்ண பக்ஷம்) என்று சொல்லுகிறோம். அமாவாசை தினத்திற்குப் பின்னல் சந்திரனின் உருவம் வளருவதாகக் காணலாம். அந்நாட்களை வளர்பிறை (சுக்கிலபக்ஷம்) என்று சொல்லுகிறோம். வளர்பிறை, தேய்பிறை, அமாவாசை, பௌர்ணமி உண்டாகும் விதத்தை இங்கு காட்டியுள்ள படத்தின்மூலம் தெரிந்துகொள்ளலாம்.

சந்திரனுக்கு இயற்கையில் ஒளியில்லை. சூரியனிடத்திலிருந்து வெளிச்சத்தை அடைந்து நமக்குக்கொடுக்கிறது. சூரியனுக்கு அசைவு ஒன்று, பூமிக்கு அசைவு இரண்டு, சந்திரனுக்கு அசைவு மூன்று. (சலனம்—அசைவு)

## 8. கிராமமும் சுற்றுப்பக்கமும்

நாம் வசிக்கும் இவ்வுலகத்தில் கிராமங்களே ஆதியில் உண்டாயின. கிராம வாழ்க்கையே மானிட வாழ்க்கைக்கு

மேலானதாகும். "கிராமங்கள் கடவுளாலுண்டாக்கப்பட்டவை, நகரங்கள் மனிதனால் உண்டாக்கப்பட்டன" என ஒரு ஆங்கிலப் பழமொழியுண்டு. ஒரு தேசத்தில் கிராமங்கள் எவ்வித நிலைமையில் இருக்கின்றனவோ அதற்குத் தக்கபடி தான் அத்தேசத்தின் நிலைமையுமிருக்கும். கிராமங்களே இராஜாங்கத்திற்கு ஆதாரம் இப்பொழுது நீங்கள் ஒரு கிராமத்தில் வசிப்பதாக வைத்துக்கொள்ளுங்கள். அக்கிராமத்திலுள்ள தெருக்கள் எத்தனை யென்றும், கோவில்களும், பள்ளிக்கூடங்களும், சத்திரங்களும் இருப்பதையும் பார்த்திருப்பீர்கள். கிராமத்தின் சுற்றுப்பக்கங்களில், பல மரங்களிருப்பதைக் காணலாம். அநேக மரங்கள் சேர்ந்து இருக்கும் இடத்திற்குத் தோப்பு என்று பெயர். இன்னும் இதைத் தவிர பல பயிர்கள் வளர்ந்திருப்பதைக் காணலாம். அப்பயிர்கள் எந்த நிலத்தில் விளைகின்றன? நிலங்களில் இரண்டு வகை உண்டு. அவை நன்செய், புன்செய் எனப்படும். நன்செய் நிலங்களில் நெல், கரும்பு, வெற்றிலை, வாழை முதலிய பயிர்கள் பயிரிடப்படுகின்றன. புன்செய் நிலங்களில் சணல் சோளம், கம்பு, கேழ்வரகு மொச்சை, துவரை முதலிய பயிர்கள் பயிரிடப்படுகின்றன. நமது நாட்டிலுள்ள கிராமங்களில் முக்கியமாய்ப் பயிரிடுவது நெல். கிராமத்தின் சுற்றுப்புறத்தில் நெல் வயலைப் பார்க்கலாம். இது நன்செய் நிலங்களில் பயிராகும். இதற்கு ஜலமும் வெய்யிலும் அதிகமாய் வேண்டும். நெல் விளையும் நன்செய் நிலத்தை முதலில் உழுது பண்படுத்தி, விதைத்துக் காலந்தவறாமல் தண்ணீர் பாய்ச்சி பயிர் வளர்ந்தபிறகு களை எடுக்கவேண்டும். பயிர் நன்றாய் வளர்ந்தபின் கதிர் உண்டாகும். கதிர்கள் நன்றாய் முற்றி தலைசாய்ந்திருக்கும்போது தாளும்

பழுத்துவிடும். அப்போது வேளாளன், அரிவாளைக் கையிற் கொண்டு தாளை அறுப்பான். தாளை ஒன்று சேர்த்துக் கட்டுக் கட்டாகக் கட்டிக் களத்தில் கொண்டுவந்து சேர்ப்பான். அதைக் கயிற்றால் கட்டி இறுகப்பிடித்துக்கொண்டு, தரை மேல் அடித்து உதறுவான். கதிர்களிலுள்ள நெல்களெல்லாம் கீழே உதிர்ந்து விடும். பிறகு நெல்லைத்தூற்றி நெல் வேறாகவும், கருக்காய் வேறாகவும் பிரிந்துபோனபிறகு, நெல்லையெல்லாம் தன் வீட்டிற்குக் கொண்டுபோய்ச் சேர்ப்பான். கொஞ்சநாள் சென்ற பிறகு மறுபடியும் பயிர் செய்ய ஆரம்பிப்பான். இன்னும் கிராமங்களைச் சுற்றிச் சில இடங்கள் மேடாயிருக்கும். அம்மேட்டு நிலத்தைப் புன்செய் என்று சொல்வோம். புன்செய் நிலங்களில் மண்கள், கறுப்பு நிறமுள்ளதாகவும், செம்மண்ணாகவும், செம்மண்ணும் மணலும் கலந்துமிருக்கின்றன, புன்செய் நிலங்களில் மேலே குறித்துள்ள பயிர்களை விளைவிக்கக், குடியானவர்கள் கிணறுகள் தோண்டி, கிணற்று நீரைப் பாய்ச்சியும், மழையின் உதவியாலும் பயிராக்குகிறார்கள். கிராமத்தைச் சுற்றியுள்ள சில இடங்களில் உப்பு மண்ணுள்ள நிலங்களாயிருக்கும். உப்பு மண்ணுள்ள நிலங்களில் ஒன்றும் விளையாது. இம்மண் துணிகளின் அழுக்கைப்போக்க உபயோகப்படுகின்றது. மண்ணில் பலவிதங்களுண்டு. 1. மணல் அதிகமான மண் 2. களி அதிகமான மண் 3. மணலும் களியும் கலந்து சமமாயுள்ள மண் 4. வண்டல் மண் 5. சுக்கான்மண் 6. களர்மண் இன்னும், கிராமங்களைச்சுற்றி நன்செய் நிலங்களும் புன்செய் நிலங்களும் இருப்பதல்லாமல், சில இடங்களில் பயிரிடாமல் இருக்கின்றன. அவ்விடங்களில் அவ்வூரிலுள்ள ஆடுமாடுகள், அங்குள்ள புற்களை மேய்வதற்கு அனுகூலமாகிறது. பூமியிலிருந்து வெட்டியெடுக்கப்படும் பொருள்களுக்கு உலோகங்கள் என்று பெயர். பூமியிலிருந்து தங்

கம், வெள்ளி, செம்பு, இரும்பு, தாமிரம், ஈயம், பொன், கருங்கல், சந்தனக்கல், சுக்கான் அல்லது சுண்ணும்புக்கல், சலவைக்கல், ஸ்லேட், களிமண், நிலக்கரி, கல் உப்பு, முதலிய பொருள்கள் வெட்டி எடுக்கிறார்கள். உங்கள் ஊரிலுள்ள வீடுகளுக்கு வெள்ளையடிக்க சுண்ணும்பை உபயோகிக்கிறார்கள். சுண்ணும்புக் கல்லைக் காளவாய்களில் சுட்டு, கரியமலவாயுவை நீக்கி, நீராக்கி அதை, பூசும் சுண்ணும்பாகவும், அச்சுண்ணும்புடன் சிறிதளவு மணலும் சேர்த்து வீட்டில் தளம் போடவும் உபயோகிக்கிறார்கள்.

## 9. கைத்தொழிலின் விபரம்

உலகத்தில் செல்வமும் சிறப்பும் அடைந்திருக்கும் ஒவ்வொரு நாடும் கைத்தொழிலாலேயே மேலான நிலைமையை அடைந்திருக்கிறது. இவ்வுலகத்திலுள்ள ஜீவப்பிராணிகள் எல்லாவற்றிற்கும் அவசியம் வேண்டியது உணவு. ஜனங்களெல்லோரும் கஷ்டப்பட்டு சம்பாதிப்பது உணவுக்கே. விளைபொருள்கள் அதிகமாய் விளையக்கூடிய இடங்களிலேயே, ஜனங்கள் குடியேறி பெரிய பட்டணங்களாகிறது நம்முடைய ஜில்லாவில், நெல், சோளம், துவரை, உழுந்து, கம்பு முதலிய தானியங்கள் விளைகின்றன.


குடியானவன்

இப்படத்தில் ஒரு குடியானவன் நிலத்தை உழுதுகொண்டிருப்பதைப் பாருங்கள். நிலத்தை உழுது பயிரிடுபவனுக்குக் குடியானவன் என்று பெயர். நிலத்தைப் பண்படுத்துவதற்கு முக்கியமாய்க் கருவி வேண்டும். அக்கருவிக்குக் கலப்பை என்று பெயர். இத்தொழில் செய்வதற்குக்கலப்பைகளையும், வேண்டியமாடுகளையும் குடியானவர்கள்

வைத்திருக்கிறார்கள். குடியானவன் கலப்பையைக்கொண்டு நிலத்தை உழுது பண்படுத்தி விதைத்துத் தண்ணீர் பாய்ச்சி, பயிர் வளர்ந்தபின் களை எடுத்து, பயிர் விருத்தியாவதற்கு முக்கியமான பல காரியங்கள் செய்யத் தச்சன், கொல்லன், கன்னான் முதலிய தொழிலாளர்களின் உதவியும், குடியானவனுக்கு வேண்டியிருக்கிறது. மரவேலை செய்பவனுக்குத் **தச்சன்** என்று பெயர்.



தச்சன்

இப்படத்தில் தச்சன், மரத்தை உளியினால் செதுக்கிக் கொண்டிருப்பதைப் பாருங்கள். விவசாயத்திற்கு வேண்டிய கலப்பை, பள்ளிக்கூடங்களில், உபாத்தியாயர்களும், மாணாக்கர்களும் உட்காருவதற்கு வேண்டிய நாற்காலிகள், பேஜைகள், சாய்மான பலகைகள், மாணாக்கர்கள் எழுதும் கற்பலகையின் சட்டங்கள், கத்திப்பிடிகள், வீட்டிற்கு வேண்டியகதவுகள், மரத்தூண்கள், உத்தரங்கள் முதலிய சாமான்கள்செய்து கொடுப்பவனே தச்சன். இவனுடைய தொழிலுக்கு வேண்டிய முக்கிய ஆயுதங்கள், ரம்பம், உளி, கொட்டாப்புளி, இழைப்புளி, சுத்தி முதலியவைகளாம். கொல்லன் இரும்பைச் சம்மட்டியால் அடித்துக்கொண்டிருப்பதைப் பாருங்கள்.

இரும்பினால் சாமான்களும், ஆயுதங்களும் செய்பவனுக்குக் **கொல்லன்** என்று பெயர். கொல்லன், தச்சனுக்கு வேண்டிய உளி, கொட்டாப்புளி, இழைப்புளி, ரம்பம்,



கொல்லன்

வாள், சுத்தி முதலிய ஆயுதங்களையும், விவசாயத்திற்கு வேண்டிய அரிவாள், மண்வெட்டி, கோளரி முதலிய ஆயுதங்களும், ஆணி, பூட்டு, கரண்டி, சங்கிலி, கீல், ஊசி, தாழ்ப்பாள், கத்தி முதலிய சாமான்களும், தட்டானுக்கு வேண்டிய அரம், முதலிய சாமான்களும் செய்து கொடுக்கிறான்.

தாமிரம், வெண்கலம், பித்தளை இவ்வுலோகங்களால் பாத்திரங்கள் செய்பவனுக்குக் **கன்னன்** என்றுபெயர்.


நாம் அணிந்துகொள்ளும் ஆபரணங்களைத் தங்கம், வெள்ளி, இவற்றால் செய்து கொடுக்கும் தொழிலாளனுக்குத் **தட்டான்** என்று பெயர்.

விவசாயத்திற்கு அடுத்தது நெசவுத்தொழில். இத்தொழிலைச் சிறியோர், பெரியோர், யாரும் வீட்டில் நிழலில் உட்கார்ந்தபடியே செய்யக்கூடிய தொழிலாகும். இத்தொழிலாளர்களைச் சேணியரென்கிறார்கள். இவர்கள் வெகுகாலமாகப் பருத்தியைச் சுத்தப்படுத்தி, நூல் நூற்றுப் பலவிதத் துணிகள்நெய்து கொண்டுவந்தார்கள். இப்படத்தைப் பாருங்கள். இப்படத்தில் துணி நெய்யும் விதத்தைக் காட்டப்பட்டிருக்கிறது. நமது நாட்டில், கொஞ்சகாலமாய் நூல் நூற்கும் தொழில் நடைபெறவில்லை. ஏனென்றால் தகுந்த கூலி கிடைக்காததால் நமது நாட்டில் விளையும் பருத்தியை வெளிநாடுகளுக்கு அனுப்பி விடுகிறார்கள். கையினால் நெய்த



நெசவுத் தொழில்.

துணியைக்காட்டிலும், இயந்திரங்களினுல் நெய்யப்பட்டு வரு கிற துணிகள் ஒரே கனமுள்ளதாயும் விலை மிகவும் குறைவா யிருக்கிறபடியாலும் ஜனங்கள் கையினுல் நெய்த துணிகளை வாங்குகிறதில்லை. சர்க்காரின் உதவியால், சுலபமாய்த் துணி களை நெய்யும்படியான இயந்திரங்களைக் கண்டுபிடித்து, முன் கையால் நெய்யப்பட்ட துணிகளின் மாதிரியைப்போல வேஷ் டிகளும் சேலைகளும் நெய்யும் முறையைப் பலவிடங்களிலும் விருத்திசெய்து வருகிறார்கள். தற்காலம் நமது மாபெரும் தலைவர் மகாத்மா காந்தியவர்களும் நாட்டு கை நெசவுத் தொழிலை விருத்தி செய்யும்படி போதித்து வருகிறார்கள். முதலில் கல்விகற்று, பின் நெசவுத் தொழில் செய்தால், பஞ் சில் எத்தனை விதங்களிருக்கின்றனவென்றும், எங்கெந்த விடங்களில் என்னென்ன விதமான பருத்தி விளையுமென்றும் இன்னும் பல விஷயங்களை அறிந்துகொள்ளமுடியும். இவ் விஷயத்தை அறிந்து, இப்போது பள்ளிக்கூடங்களில் வாசிக் கும் மாணாக்கர்களுக்குக் கல்வி கற்பதுடன் இத்தொழிலையும் சிலபள்ளிக்கூடங்களில் கற்பிக்கப்பட்டு வருகின்றன.



செக்கான்

இப்படத்தைப் பாருங்கள் வாணியன் செக்கில் எண் ணெய் எடுக்கிறான். எள்ளு, ஆமணக்கு, நிலக்கடலை தேங் காய், பணிலாக்கொட்டை முதலிய எண்ணெய் வித்துக் களை செக்கான்கள் நன்றாய் வெய்யிலில் உலர்த்திச் செக்கிலிட்டு ஆட்டி எண்ணெய் எடுக் கிறார்கள். எள்ளினுல் எடுக்கப்படும் எண்ணெயைப் பலகாரங்

களுக்கும், தேய்த்துக்கொள்ளவும் உபயோகப்படுகிறது. நிலக்கடலை, ஆமணக்கு இவைகளினுல் எடுக்கப்படும் எண்ணெயை நமது நாட்டில் விளக்குகளுக்கு உபயோகப்படுத்துகிறார்கள். நல்லெண்ணெயை நாம் உபயோகப்படுத்துவதைப் போல், திருவாங்கூர், மலையாளம், தென்கன்னடம் ஜில்லாக்களில் தேங்காய் எண்ணெயை உபயோகப்படுத்திக்கொள்ளுகிறார்கள்.

குயவன்:—உங்களுடைய வீடுகளில் மண்ணால் செய்யப்பட்ட பாத்திரங்களைப் பார்த்திருப்பீர்கள். மண் பாத்திரங்கள் செய்யும் தொழிலாளனுக்குக் குயவன் என்று பெயர். குயவன், களிமண்ணைக்கொண்டுவந்து அதிலிருக்கும் சிறு கல்களை எடுத்துவிட்டுப்பக்குவப்படுத்திச் சக்கரத்தில் வைத்துச் சுழற்றுகிறான். பிறகு தன்னுடைய கைகளினுல், வேண்டிய அளவுப்பிரகாரம் பாண்டத்தைச் செய்கிறான். அப்பாண்டத்தை நெருப்பில் சுட்டெடுத்துப் பலவிடங்களில் விற்பனைசெய்கிறான்.

வண்ணான்:—நம்முடைய அழுக்குத்துணிகளை வெளுப்பவன் வண்ணான். நாம் நாள்தோறும் சுத்தமான துணிகளைத் தரித்துக்கொண்டிருக்க வண்ணான் உதவி அவசியம் வேண்டியது.

இதற்குமுன் சொன்ன தொழிலாளர்களைத் தவிர, இன்னும் பலவிதமானத் தொழிலாளர்கள் இருக்கிறார்கள். புகையிலையைப் பக்குவப்படுத்திச் சுருட்டு செய்து விற்பவர்கள். நாம் காலில் அணிந்துகொள்ளும் பூட்ஸ், செருப்பு முதலியவைகளைத் தோலினுல் செய்து விற்பவர் சக்கிலியர்

கள். மீனகளைப் பிடித்து உப்பிட்டு வெய்யிலில் உலர்த்தி விற்பனை செய்பவர் சேம்படவர்கள். இன்னும் சில இடங்களில் ஆடுமாடுகளை வளர்த்துப் பாலைக்கறந்து விற்பனை செய்கிறவர்கள் இடையர்கள். பாலிலிருந்து, தயிர், மோர், வெண்ணெய், நெய் செய்து விற்பனை செய்கிறார்கள். இதைத்தவிர பலவிதத் தொழில்களும் நடக்கின்றன.

## 10. போக்கு வரவுக்குரிய மார்க்கங்கள்

இருப்புப்பாதை மார்க்கங்கள்:— நீங்கள் புகை வண்டிகளை முன் பாடத்தில் பார்த்திருப்பீர்கள். முதலிலிருக்கும் உருவத்திற்கு என்ஜின் என்று பெயர். இருப்புகளினாலும், எஃகினால் என்ஜின் செய்யப்பட்டிருக்கிறது. இதன் பின் பக்கத்தில் இணைக்கப்பெற்ற வண்டிகளில் ஜனங்கள் உட்கார்ந்திருக்கிறார்கள், என்ஜின் நீராவியின் உதவியால் இழுக்கப்படுகிறது. இவ்வண்டி போவதற்கு மேடு பள்ளமில்லாதபடி சமப்படுத்திய பாதை போடப்பட்ட தண்டவாளங்களின் மேல் இவ்வண்டி ஓடுகிறது. சொற்பச் செலவில் அதிக தூரமுள்ள இடங்களுக்குப்போக இம்மார்க்கம் அனுகூலமாயிருக்கிறது. இவ்வண்டி போகக்கூடிய வழியிலிருக்கும் பட்டணங்களுக்கு ஏற்றுமதி இறக்குமதி செய்ய அனுகூலப்படுகின்றன. இன்னும் கடிதப் போக்கு வரவுக்கும் உதவியாகிறது. அதிக தூரமுள்ள ஊரிலிருக்கும் நமது பந்துக்களின் அவசர விஷயங்களை (தந்திச் சமாசாரங்கள்) அறிவதற்கு, இருப்புப் பாதைக்குச் சமீபத்தில் போடப்பட்டிருக்கும் கம்பிகள் உபயோகப்படுகின்றன.

படகு புகைக்கப்பல் மார்க்கங்கள்:— பிள்ளைகளே, நீங்கள், மதுரையில் தைமீல் மாரியம்மன் கோவில் தெப்பக்குளத்தில் நடக்கும் தெப்பத்திருவிழாவில், மையமண்டபத்திற்கு அநேக ஜனங்கள் படகுகளில் ஏறி அம்மண்டபத்திற்கு போவதைப் பார்த்திருப்பீர்கள். இன்னும் சில ஊர்களின் சமீபத்திலுள்ள நதிகளில் ஜலம் அதிகமாய் வந்துவிட்டால், அக்கரையிலுள்ள ஊர்களுக்கு நதியைக் கடந்து போக, படகுகளிலும், பாய்மரக்கப்பல்களிலும் போகிறார்கள். கடல், சமுத்திரங்களைக் கடக்கப் புகைக்கப்பல்களில் பிரயாணம் செய்கிறார்கள். போக்கு வரவுக்கு இவைகளும் அனுகூலமானவை.

வண்டிப் பாதைகள் :— இருப்புப் பாதைகளில்லாத இடங்களில், கட்டை வண்டிகளும், குதிரை வண்டிகளும், பொதிமாடுகளும், மோட்டார் வண்டிகளும், போக்குவரவுக்கு உபயோகமாகின்றன. இன்னும் சில இடங்களில் ஜனங்களே மூட்டைகளைச் சுமந்துகொண்டு போகிறார்கள். மேற்கண்ட வண்டிகள் போவதற்கும், ஜனங்கள் ஆடுமாடுகள் நடப்பதற்கும் வசதியாக, ரஸ்தாக்கள் மேடுபள்ளமில்லாமலிருக்கச் சரளைக் கற்களைப் போட்டுச் சமப்படுத்தி வைத்திருக்கிறார்கள். ரஸ்தாக்களின் இருபுறங்களிலும் நிழல் தருவதற்கு மரங்கள் வைத்திருக்கிறார்கள். ரஸ்தாக்களின் இடையில், ஓடைகள், கால்வாய்கள், நதிகள் குறுக்கிட்டால், அவ்விடங்களில் போக்கு வரவுக்கு அனுகூலமாக பாலங்கள் கட்டியிருக்கிறார்கள். சுமைகளைச் சுமந்து கொண்டுபோகும் ஜனங்கள் சுமைகளை இறக்கிவைத்து இளைப்பாறுவதற்கு கல்மேடைகள் (சுமைதாங்கி) வைத்திருக்கிறார்கள்.

## 11. ஜனங்களும் பாஷையும் மதமும்

உலகத்தில் கடவுளால் உண்டாக்கப்பட்ட ஜீவப்பிராணிகளில் மனிதவகுப்பு மிகவும் உயர்ந்தது. மனிதர்களுக்கு, நன்மை, தீமை என்பதை அறியக்கூடிய பகுத்தறிவு உண்டு. இஜ்ஜில்லாவில் பலர் நிலங்களை உழுது பயிரிட்டு ஜீவிக்கிறார்கள். இன்னும் சிலர் கைத்தொழிலாலும், வியாபாரம் செய்தும் ஜீவிக்கிறார்கள். இஜ்ஜில்லாவில் வழங்கும் மதங்கள் மூன்று. அதாவது இந்து மதம், கிறிஸ்துவ மதம், முகம்மதிய மதம். முன் பெரிய மகான்கள் கூறிய வேதங்களைக் கைக்கொண்டு அதன்படிக் கடவுளைத் துதிப்பவர்கள் இந்துக்கள். முகம்மது ஆதியில் அரேபியா தேசத்தில் உபதேசித்துவந்த மதம் முகம்மதியமதம். இயேசு கிறிஸ்து ஆதியில் ஏற்படுத்திய மதம் கிறிஸ்துவ மதம். இந்துக்களில் பலர் தமிழ், தெலுங்கு, கன்னடம், துளுவம், மலையாளம், முதலிய பாஷைகள், பேசுகிறார்கள். முகம்மதியர்களில் சிலர் இந்துஸ்தானி பாஷையும், சிலர் தமிழும் பேசுகிறார்கள். மூன்று மதஸ்தர்களிலும் சிலர் ஆங்கில பாஷையைப் பேசுகிறார்கள்.

## 12. வியாபாரம்

பொருள்கள் கிடைக்குமிடத்திலிருந்து வாங்கிக் கொண்டுபோய், கிடையாத இடங்களில் அப்பொருள்களைக் கொண்டுபோய் விற்பதற்கு வியாபாரம், வர்த்தகம் என்று பெயர். நாம் உண்ணும் ஆகாரப்பொருள்களுக்கும், நாம் உடுத்திக்கொள்ளும் உடைகளுக்கும் ஆதாரம் நிலம். நம்முடைய ஊர்களில், பயிரிடப்படும் பொருள்களில் தேவை

யானதுபோக, மீதமான பொருள்களை விற்கிறோம். நமக்குக் கிடைக்காத பொருள்களைச், சந்தையிலாவது, மற்ற ஊர்களிலாவது வாங்கிக்கொள்ளுகிறோம். நம்முடைய ஊரிலிருந்து வெளியூர்களுக்கு அனுப்பப்படும் பொருள்களுக்கு ஏற்றுமதி என்றும், வெளியூர்களிலிருந்து நம்முடையஊரில்வந்து இறங்கும் பொருள்களுக்கு இறக்குமதி என்றும் பெயர். வியாபாரம் செய்வதற்கு முக்கியமாய் கல்விவேண்டும், ஏனென்றால் வியாபாரம் செய்பவனுக்கு (வர்த்தகனுக்கு) எங்கெந்த காலத்தில் எங்கெந்தப் பொருள்கள் செலவாகுமோ, அந்தந்தப் பொருள்களை வாங்கி விற்பதற்கும் வரவு செலவு கணக்கு வைத்துக்கொண்டு, தான் லாப நஷ்டத்தை யறிவதற்கும், கல்வி அவசியமானது.

---

## 13. அரசாட்சி (துரைத்தனம்)

நாம் வசிக்கும் தேசம் இந்தியா. இத்தேசமானது, இங்கிலாந்தின் அரசராகிய, மாட்சிமை தங்கிய ஐந்தாம் ஜார்ஜ் சக்கரவர்த்தியின் ஆளுகைக்குட்பட்டிருக்கிறது. நமது சக்கரவர்த்தியின் ஆளுகைக்குட்பட்ட தேசங்கள் அநேகமிருப்பதால், நாம் வசிக்கும் தேசத்தின் இராஜ்ஜிய நிர்வாகம் செய்ய, நமது சக்கரவர்த்தி வசிக்கும் இங்கிலாந்தில் இந்தியாமந்திரி என்ற ஒரு அதிகாரியை ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. நமது தேசமுழுவதும் ஆளுவதற்கு வைஸ்ராய் என்னும் பட்டப்பெயர்கொண்ட ஒருவரை ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இவர் நமது தேசத்தின் தலைமை நகராகிய டில்லிமாநகரத்தில் வசிக்கிறார். தேசமுழுவதும் ஒருவரே ஆளுவதென்றால் மிகவும் கஷ்டமானதென்று ராஜாங்கத்தார்

அறிந்து, பலபிரிவுகள் ஏற்படுத்தி ஒவ்வொரு பிரிவிற்கும் ஒவ்வொரு அதிகாரிகளை நியமித்து, சுலபமாக ஆளும்படி செய்திருக்கிறார்கள். கிராமங்களை மேல்பார்ப்பதற்குக் கிராம முனிசீப்புகள் என்ற அதிகாரிகளையும், தாலூக்காக்களை மேல் பார்ப்பதற்கு தாசில்தார்கள் என்ற அதிகாரிகளையும், ஜில்லாக்களை மேல்பார்ப்பதற்கு கலெக்டர்கள் என்ற அதிகாரிகளையும், இராஜதானிகளை மேல் பார்ப்பதற்கு கவர்னர்கள் என்ற அதிகாரிகளையும் நியமிக்கப்பட்டு நமது தேசம் ஆளப்பட்டு வருகிறது. மேற்கண்ட அதிகாரிகளுக்கு உதவிக்காகப் பல உத்தியோகஸ்தர்களை நியமித்திருக்கிறார்கள். தேசத்தின் பல பிரிவுகளாவன:—அநேககுடும்பங்கள் சேர்ந்தது ஒரு பட்டி. அநேகபட்டிகள் சேர்ந்தது ஒரு கிராமம். அநேக கிராமங்கள் சேர்ந்தது ஒருதாலூக்கா. அநேக தாலூக்காக்கள் சேர்ந்தது ஒரு ஜில்லா. அநேக ஜில்லாக்கள் சேர்ந்தது ஒரு இராஜதானி. அநேக இராஜதானிகளும், பல பெரும் பிரிவுகளும் சேர்ந்தது தேசம்.

## 14. நீர் நிலப்பிரிவுகள்

நாம் வசிக்கும் இப்பூமியில் பூபாகம் ஒருபங்கும் ஜல பாகம் மூன்றுபங்குமாக இருக்கின்றன.

**மகாசமுத்திரம்:**—பெரிய கண்மாய், ஏரி முதலிய நீர் பாகங்களைக்காட்டிலும் மிகவும் பெரிது கடல். கடலைக் காட்டிலும் மிகவும் பெரியதாயும், உப்பு நீருள்ளதாயுமிருக்கும் மிகப்பெரிய ஜலபாகத்திற்கு **மகாசமுத்திரம்** என்று பெயர். உதாரணம், நாம் வசிக்கும் இந்தியா தேசத்தின் தெற்கேயுள்ளது **இந்துமகாசமுத்திரம்.**


சமுத்திரம்

கடல்:—மகாசமுத்திரத்தைக் காட்டிலும், சிறிய நீர் பாகத்திற்குக் கடல் என்று பெயர். உதாரணம் நாம் வசிக்கும் தேசத்தின் மேற்கிலுள்ள அராபிக்கடல்.

வளைகுடா:—பூபாகத்திற்குள் குறுகிச்செல்லும் சமுத்திரத்தின் நீர்பாகத்திற்கு வளைகுடா என்று பெயர். உதாரணம் இந்தியாவிற்கு வடமேற்கிலுள்ள அரேபியா தேசத்திற்கு கிழக்கிலுள்ள பாரஸீக வளைகுடா.

விரிகுடா:—விரிகுடா என்பது வளைகுடாவைப்போல் குறுகலாகயிராமல் விரிவாக இருக்கும். பூமிக்குள் விரிந்து செல்லும் நீர்ப்பாகத்திற்கு விரிகுடா என்று பெயர். உதாரணம், நாம் வசிக்கும் தேசத்திற்குக் கிழக்கிலுள்ள வங்காள விரிகுடா.

ஜலசந்தி:—இரண்டு பெரிய ஜலபாகங்களைச் சேர்க்கும் குறுகலான கடற்பிரிவுக்கு ஜலசந்தி என்று பெயர். உதாரணம், நாம் வசிக்கும் இந்தியாதேசத்திற்கும் இலங்கைத் தீவுக்கும் மத்தியிலுள்ள பாக்ஸ் ஜலசந்தி.

ஏரி:—நான்கு பக்கங்களிலும் தரையால் சூழ்ந்து மத்தியிலுள்ள ஜலபாகத்திற்கு ஏரி என்று பெயர். உதாரணம், மதுரைக்கு 2 மைல் தூரத்திலுள்ள மாடக்குளம் ஏரி.

குட்டை:— குட்டை என்பது ஒரு சிறிய ஏரி. பள்ளமுள்ள இடங்களில் ஜலம் வந்து நிரம்பி நிற்கும் ஜல பாகத்திற்குக் குட்டை என்று பெயர். இதை, நாம் வசிக்கும் இந்தியாவில் குளம் என்று சொல்லுகிறோம். உதாரணம், மதுரை நதிக்குக் கிழக்கிலுள்ள வண்டியூர் குளம்.

நதி:— மழை ஜலத்தால் உண்டாகும் மிகச்சிறிய கால்வாய்கள் ஒன்றுய்ச் சேர்ந்து ஒரு பெரிய கால்வாயாகிறது. இப்படிப் பலகால்வாய்கள் ஒன்று சேர்ந்தது நதி. உயரமான மலைகளில் உற்பத்தியாகி பள்ளமான இடத்தை நோக்கிச்செல்லும் நீர்ப்பாகத்திற்கு நதி என்று பெயர். உதாரணம், இஜ்ஜில்லாவில் ஓடும் வைகைநதி.

உபநதி:— நதி ஓடும் வழியில், வேறு சில கால்வாய்கள் வந்து இந்நதியுடன் கலக்கும். அப்படிக் கலக்கும் கால்வாய்க்கு உபநதி என்று பெயர். உதாரணம் அமராவதி நதி.

கிளைநதி:— ஒரு நதியிலிருந்து பிரிந்து செல்லும் நதிக்குக் கிளைநதி என்று பெயர். உதாரணம், நமது ஜில்லாவில் ஓடும் வைகைநதியின் கிளையாகிய கிருதமாலை.

நீர்வீழ்ச்சி:—உயரத்திலிருந்து செங்குத்தாய் பள்ளமான பூமியில் விழும் நதிகளின் பாகத்திற்கு நீர் வீழ்ச்சி என்று பெயர். உதாரணம் காவேரி நீர் வீழ்ச்சி.

கண்டம்:—அநேக தேசங்கள் அடங்கிய, பெரிய நிலப்பிரிவுக்குக் கண்டம் என்று பெயர். உதாரணம், நாம்வசிக்கும் ஆசியா கண்டம்.

தேசம்:—பல மாகாணங்கள் அடங்கிய நிலப்பிரிவுக்குத் தேசம் என்று பெயர். உதாரணம் நாம் வசிக்கும் இந்தியா தேசம்.

இராஜதானி:—அநேக ஜில்லாக்கள் சேர்ந்தது ஒரு இராஜதானி. உதாரணம் நாம் வசிக்கும் சென்னை ராஜதானி.

ஜில்லா:—பல தாலூக்காக்கள் சேர்ந்தது ஒரு ஜில்லா. உதாரணம், நாம் வசிக்கும் மதுரை ஜில்லா.

தீபகற்பம்:—மூன்று பக்கங்களில் பெரும்பாலும் சமுத்திரத்தினுல் சூழப்பட்ட பூபாகத்துக்குத் தீபகற்பம் என்று பெயர். உதாரணம் நாம் வசிக்கும் இந்தியா.

தீவு:— நான்கு பக்கமும் நீரால் சூழப்பட்ட நிலப்பாகத்துக்குத் தீவு என்று பெயர். உதாரணம் இராமேசுவரம்.

பூசந்தி:—இரண்டு பெரிய பூபாகங்கள் ஒன்று சேர்ந்து இரண்டு பெரிய ஜலபாகங்களைப் பிரிக்கும் குறுகிய பூபாகத்துக்குப் பூசந்தி என்று பெயர். உதாரணம் வட அமெரிக்காவின் தென்கோடியிலுள்ள பனமா பூசந்தி.

டெல்டா:— ஒரு நதி முடியுமிடத்தில் (முகத்துவாரம்) நதியினுல் கொண்டுவரப்பட்ட வண்டல்மண் படிந்த நிலத்திற்கு டெல்டா என்று பெயர். உதாரணம் கங்காநதிடெல்டா.

முனை :— சமுத்திரத்திற்குள் குறுகிய வாயுடன் செல்லும் நிலப்பாகத்துக்கு முனை என்று பெயர். உதாரணம், நாம் வசிக்கும் தேசத்தின் தென்கோடியிலுள்ள கன்னியாகுமரி முனை.

குன்று:— நிலத்தின் உயரமான பாகத்திற்குக் குன்று என்று பெயர். உதாரணம், பசு மலைக்குன்று.

மலை:— குன்றைக்காட்டிலும் அதிக உயரமாயிருக்கும் பாகத்திற்கு மலை என்று பெயர். உதாரணம், இஜ்ஜில்லாவிலுள்ள பழநிமலை.


**மலைத்தொடர்ச்சி:**— மலைகள் வரிசையாய்த் தொடர்ந்திருந்தால், அவற்றிற்கு **மலைத்தொடர்ச்சி** என்று பெயர். உதாரணம், இஜ்ஜில்லாவின் மேற்கிலுள்ள **மேற்குத்தொடர்ச்சி மலை.**

**பீடபூமி:**—பூமியைவிட உயரமாயிருக்கும் மேட்டு நிலத்துக்குப் **பீடபூமி** என்று பெயர். உதாரணம், நாம் வசிக்கும் இந்தியாவிலுள்ள **தக்ஷிண** பீடபூமி.

**பள்ளத்தாக்கு:**—இரண்டு மலைகளுக்கு மத்தியிலுள்ள பள்ளமான பூமிக்குப் **பள்ளத்தாக்கு** என்று பெயர். உதாரணம், பெரியகுளம் தாலூக்காவிலுள்ள **கம்பம்** பள்ளத்தாக்கு.

**பாலைவனம்:**—நீர் இல்லாமல் வறண்ட நிலபாகத்துக்குப் **பாலைவனம்** என்று பெயர். உதாரணம் இந்தியாவிலுள்ள **தார்** பாலைவனம்.

**காடு:**— பல செடி கொடிகள் அடர்ந்திருக்கும் நிலபாகத்துக்குக் **காடு** என்று பெயர். உதாரணம், மதுரைக்கு 12 மைல் தூரத்திலுள்ள **அழகர் கோவில்** காடு.


மதுரை ஜில்லா
ஸகேல் 1 அங்=16 மைல்
கோயம்புத்தூர் ஜில்லா
திருச்சிராப்பள்ளி ஜில்லா
திருவாங்கூர் ராஜ்யம்
இராமநாதபுரம் ஜில்லா
பழனி தாலூகா
கீரனூர்
விருப்பாச்சி
திண்டுக்கல் தாலூகா
திண்டுக்கல்
வடமதுரை
அய்யலூர்
கன்னிவாடி
அம்பாத்துரை
கொடைக்கானல் தாலூகா
பூம்பாறை
கொடைக்கானல்
நிலக்கோட்டை தாலூகா
நிலக்கோட்டை
வத்தலக்குண்டு
அம்மையநாயக்கனூர்
சோழவந்தான்
மேலூர் தாலூகா
அழகர்கோவில்
மேலூர்
திருவாதூர்
பெரியகுளம் தாலூகா
பெரியகுளம்
போடிநாயக்கனூர்
தேனி
உத்தமபாளையம்
மதுரை தாலூகா
சமயநல்லூர்
மதுரை
திருப்பரங்குன்றம்
திருமங்கலம் தாலூகா
உசிலம்பட்டி
கப்பலூர்
திருமங்கலம்
சிவரக்கோட்டை
கள்ளிக்குடி
K. SUNDARANUJ
MADURA.

## 15. ஜில்லா

நாம் வசிக்கும் தேசம் இந்தியாவை பல பெரிய பிரிவுகளாகப் பிரித்திருக்கிறார்கள். அவற்றில் நாமிருக்கும் பிரிவுக்கு சென்னை இராஜதானி என்று பெயர். இந்த இராஜதானியை 26 ஜில்லாக்களாகப் பிரித்திருக்கிறார்கள். அவையாவன:—

1. கஞ்சம்
2. விசாகப்பட்டணம்
3. கோதாவரி
4. கிருஷ்ணா
5. குண்டூர்
6. நெல்லூர்
7. சென்னபட்டணம்
8. செங்கற்பட்டு
9. தஞ்சாவூர்
10. திருச்சிணுப்பள்ளி
11. மதுரை
12. இராமநாதபுரம்
13. திருநெல்வேலி
14. தென் ஆற்காடு
15. வட ஆற்காடு
16. சித்தூர்
17. சேலம்
18. கோயம்புத்தூர்
19. மலையாளம்
20. நீலகிரி
21. கர்நூல்
22. பல்லாரி
23. தென்கன்னடம்
24. கடப்பை
25. அனந்தபுரம்
26. அஞ்சங்கோ

# 16. மதுரை ஜில்லா


நாம் வசிக்கும் இராஜதானியிலுள்ள ஜில்லாக்கள் 26-ல், நாமிருக்கும் ஜில்லா **மதுரை.** இஜ்ஜில்லாவைப்பற்றி பின் வரும் விஷயங்களால் அறியலாம்.

## 17. இருக்குமிடம் பரிமாணம்

இம்மதுரை ஜில்லாவின் வடக்கில் கோயம்புத்தூர் ஜில்லாவும் திருச்சினுப்பள்ளி ஜில்லாவும், தெற்கில் இராமநாதபுரம் ஜில்லாவும், கிழக்கில் திருச்சிராப்பள்ளி ஜில்லாவின் கொஞ்சபாகமும், புதுக்கோட்டை ராஜ்யமும் இராமநாதபுரம் ஜில்லாவும், மேற்கில் திருவாங்கூர் ராஜ்யமும், கோயம்புத்தூர் ஜில்லாவும் இருக்கின்றன. இஜ்ஜில்லாவின் விஸ்தீரணம் 4916 சதுரமைல் என்று கணக்கிட்டிருக்கிறார்கள். சதுரமைல் என்றால் என்ன? ஒரு இடத்தின் அளவு நீளத்தில் மைலாகவும், அகலத்தின் அளவு மைலாகவும் இருந்தால், நீளத்தின் அளவையும் அகலத்தின் அளவையும் பெருக்கினுல் வரும் விடை சதுர மைலாகும். இன்னும் பல இடங்களின் அளவு நீளத்திலும் அகலத்திலும், கஜம் அல்லது அடியாயிருந்தால், முன்போலவே நீளத்தையும் அகலத்தையும் பெருக்கி, வரும் விடை சதுர கஜம் அல்லது சதுர அடி ஆகும்.

## மதுரை ஜில்லா

ஸ்கேல் 1 அங்குலம்-24 மைல்



## 18. இயற்கை அமைப்பு

ஒவ்வொரு இடத்திலுமுள்ள, மலைகள், குன்றுகள், நதிகள், ஏரிகள் சமவெளிகள் முதலியவைகள் இயற்கையாகவே உண்டாயிருக்கின்றன. நீங்கள், படத்தைப்பார்த்து, எங்கெந்த இடங்களில் மலைகளிருக்கின்றனவென்பதையும், மற்ற இடங்களிலுள்ள நிலம் எப்பேர்ப்பட்ட மண் உள்ளதென்றும், அவ்விடங்களில் நீர் வசதி உண்டா, அல்லது வறண்ட பூமியா, அல்லது பள்ளத்தாக்கான இடமா, என்று படத்தைப் பார்த்து அறியலாம். இம்மதுரை ஜில்லாவை நமது இராஜாங்கத்தார் எட்டுப்பிரிவுகளாகப் பிரித்திருக்கிறார்கள். அவைகள் மதுரைத் தாலூகா, மேலூர் தாலூகா, திண்டுக்கல் தாலூகா, பழனித்தாலூகா, நிலக்கோட்டைத் தாலூகா, கோடைக்கானல் தாலூகா, திருமங்கலம் தாலூகா, பெரியகுளம் தாலூகா, எனப்படும். இஜ்ஜில்லாவில் பழனி, பெரியகுளம், கொடைக்கானல் இத்தாலூக்காக்கள் மலைகளும், பள்ளத்தாக்குகளுமுள்ள பூமி. திண்டுக்கல், மேலூர் இத்தாலூக்காக்களில் நீர்வளம் குறைவு. செம்மண் பூமி. திருமங்கலம், தாலூகா கரிசல் நிலமுடைய பூமியாயிருக்கிறது. மதுரை நிலக்கோட்டைத் தாலூக்காக்கள் பெரியாற்றுக்கால்வாய்கள் பாய்வதால் நீர் வசதியுள்ளதாயிருக்கிறது.

## 19. மலைகளும் நதிகளும்

### மலைகள்

சமவெளியைவிட தரையானது உயர்ந்து மேடாயிருந்தால் குன்று என்றும், குன்றைக்காட்டிலும் அதிக உயரமாயிருந்தால் மலை என்றும், இதற்கு முன்னால் படித்திருக்கி

ளேரும், இஜ்ஜில்லாவில் மேற்கே மலைகளும், தெற்கே சில குன்றுகளுமிருக்கின்றன.

1. வராகமலை:—இம்மலைக்குப் பழனிமலை என்றுபெயர். இம்மலை, இஜ்ஜில்லாவின் மேற்கு எல்லையாயிருக்கிற மேற்குத் தொடர்ச்சிமலையின் ஒரு கிளையாயிருக்கிறது. இம்மலை திண்டுக்கல், பழனி, தாலூக்காக்களில் வியாபித்திருக்கிறது. இம்மலையின் நீளம் சுமார் 50 மைல். இம்மலையின் உயரம் ஏறக்குறைய 8000 அடி.

2. கோடைக்கானல் மலை:—இம்மலை பழனிமலையின் தெற்கேயுள்ளது. இம்மலையில் பேரிக்காய், கடுகு, உருளைக் கிழங்கு, ஆப்பிள் பழங்கள், ஆரஞ்சுப்பழங்கள் முதலியவைகள் அதிகமாய்க் கிடைக்கின்றன. அங்கு காப்பித்தோட்டங்களும் உண்டு. இம்மலைக்குக் கோடைகாலத்தில் தேக சௌக்கியத்திற்காக ஐரோப்பியர்களும், பிரபுக்களும், உத்தியோகஸ்தர்களும் போய் இருந்து வருகிறார்கள்.

3. உயர்ந்த வாவிமலை:—இம்மலை பழனி மலைக்கு ஏறக்குறையத் தென்கிழக்கில் சுமார் 30 மைல் தூரத்தில் உள்ளது. பழனிமலைக்கும், இம்மலைக்கும் மத்தியிலுள்ளது கம்பம் பள்ளத்தாக்கு.

4. வர்ஷநாடு ஆண்டிப்பட்டி மலைகள்:—இம்மலைகள் திருமங்கலம் தாலூக்காவிற்கு மேற்கிலுள்ளது. இதன் ஒரு பிரிவுக்கு நாகமலை என்று பெயர். இம்மலைகளுக்கு மேற்கிலிருக்கும் பள்ளத்தாக்கிற்கு வர்ஷநாட்டுப் பள்ளத்தாக்கு என்று பெயர். இம்மலைகளின் பெயர் கொண்ட ஊர்களை அடுத்திருப்பதால் இம்மலைகளுக்கு இப்பெயர் உண்டாயிற்று.

5. **மேற்குத் தொடர்ச்சி மலைகள்:—** இம்மலைகளுக்குத் திருவாங்கூர் மலைகள் என்று பெயர். இம்மலைகள் பெரிய குளம் தாலூக்காவிற்கு மேற்கிலுள்ளது. இத்தொடர் மலை அதிக உயரமுள்ளது. இங்கு அநேக வகையான பல பெரிய மரங்கள் வளர்கின்றன. யானைகள் அதிகம்உண்டு. இம்மலைத் தொடரின் தென்கோடியிலுள்ள முனைக்குக் கன்னியாகுமரி என்று பெயர்.

6. **சிறுமலை:—**இம்மலை நத்தம் என்ற கிராமத்திற்குக் கிழக்கிலுள்ளது. இம்மலை வாழைப்பழங்களுக்குப் பெயர் பெற்றது. இவ்வாழைப்பழத்திற்குச் சிறுமலைப்பழமென்றும் சொல்வதுண்டு. இங்கு காப்பியும், ஏலக்காயும் பயிர் செய்யப் படுகின்றன. இங்கு, காட்டு மிருகங்களும் வசிக்கின்றன. இம்மலையின் நீளம் சற்றேறக்குறைய 19 மைல் உள்ளது.

7. **நாகமலை:—**இம்மலை, மதுரைக்கு மேற்கில் சுமார் 10 மைல் தூரத்திலுள்ளது. இம்மலையில் மரங்களும் செடிகளும் அதிகமாய் இல்லை. ஆடுமாடுகள் மேய்வதற்குத்தகுந்த இடமாயிருக்கின்றன.

8. **பசுமலை:—**இம்மலை, மதுரைக்குத் தெற்கில் 2மைல் தூரத்திலுள்ளது. இங்கு மரங்கள் விசேஷமாய் கிடையா.

9. **யானைமலை;—**இம்மலை ஒரு பெரிய பாறை. இம்மலையில் மரஞ்செடிகள் இல்லை. இம்மலையானது தூரப்பார்வைக்கு யானைபோலிருப்பதால், இம்மலைக்கு இப்பெயர் வரலாயிற்று. இது மதுரைக்கு வடகிழக்கில் 6 மைல் தூரத்தில் இருக்கிறது. நாகமலை, பசுமலை, யானைமலை, இவை

கள் திருவிளையாடல் புராணத்தில், மதுரையை அழிக்கும் படி சமணர்கள், நாகம், பசு, யானை, இவைகளை அனுப்ப இவைகள் பரமசிவனின் சாபத்தால் கல்லாக மாறிவிட்ட தாகக் கூறப்பட்டிருக்கின்றன. நாகமலை, யானைமலை, இவ் விடங்களுக்கு ஆடி, தை, மாதங்களில் தீர்த்தமாட திரளான ஜனங்கள் போகிறார்கள்.

10. அழகர் மலை:—இதுமதுரைக்கு வடக்கே 12 மைல் தூரத்திலுள்ளது. இம்மலையின் அடிவாரத்தில் கள்ளழகர் கோவில் உண்டு. இம்மலையில் மரங்கள் அதிகமாய் உண்டு. இங்கு காட்டு எருமைகளிருக்கின்றன.

11. திண்டுக்கல் குன்று;—இது ஒரு பெரிய பாறை. இதன் உயரம் சுமார் 300 அடி உள்ளது. இக்குன்றின்மேல் ஒரு கோட்டை உண்டு. கோட்டைக்குள் ஒரு சுனை உண்டு. கோடைகாலத்தில் தண்ணீர் வசதியற்ற சமயத்தில் அங் குள்ள தண்ணீரை எடுத்து உபயோகிக்கிறார்கள்.

12. ஸ்கந்த மலை:—மதுரைக்குத் தென் மேற்கில் 4 மைல் தூரத்திலுள்ளது. இம்மலையின் மேல் ஒரு முகம்மதிய கோரியும், காசி விஸ்வநாதர் கோவிலும் உண்டு. இங்குள்ள சுனையில் குடிப்பதற்கு நல்ல ஜலம் கிடைக்கிறது. இம்மலை யின் மீதுள்ள கோரியில் சிக்கந்தர் அடக்கம் செய்யப்பட்ட தால் இம்மலைக்குச் சிக்கந்தர் மலை என்று பெயராயிற்று.

### நதிகள்

**வைகை நதி:**—மழைகாலத்தில்தான் இம்மதுரை ஜில் லாவில் மழை பெய்கிறது. கிழக்கேயுள்ள பிரதேசங்களைக்

காட்டிலும் மேற்கேயுள்ள மலைப்பிரதேசங்களில் மழை அதி கம். இஜ்ஜில்லாவில் ஓடும் நதிகளில் முக்கியமானது வைகை. இந்நதி இஜ்ஜில்லாவிலுள்ள நதிகளில் பெரியது. மேற்கே யுள்ள பெரியகுளம் தாலூக்காவிற்குக் கிழக்கேயுள்ள வருஷ நாடு, ஆண்டிப்பட்டி மலைகளில் உற்பத்தியாகிறது. பிறகு, இந்நதி கிழக்கே திரும்பி நிலக்கோட்டைத்தாலூக்கா, மது ரைத் தாலூக்காக்களில் பிரவேசித்துப் பிறகு இராமநாத புரம் ஜில்லாவில் சென்று ஆற்றங்கரை என்ற கிராமத்திற் கருகில் கடலில் சங்கமமாகின்றது. இந்நதியில் மழை காலத் தில் தண்ணீர் வேகமாய்ச் செல்லுவதால், இந்நதிக்கு வேக வதி என்று மறு பெயராயிற்று. மதுரையில் மீனாக்ஷியம்ம னுக்கும் சொக்கருக்கும், கல்யாணம் நடக்கும்போது, சோம சுந்தரக் கடவுளுடன்வந்த குண்டோதரனது வேண்டுகோ ளின்படி, அவனது தாகத்தைத் தீர்ப்பதற்காக குண்டோ தரனது கையைக் கடவுள் சொக்கநாதர் வைகை என்று சொல்ல, குண்டோதரன் கையை வைத்ததால், இந்நதி உண் டான காரணத்தால் இந்நதிக்கு வைகை யென்று பெய ரான தென்பர். இந்நதியின் உபநதிகள் சுருளி நதி, வராக நதி, மஞ்சள்நதி, முக்கிய கிளைநதி கிருதமாலை, குண்டாறு. இந்நதி மேற்குத் தொடர்ச்சி மலையில் உற்பத்தியாகி, திரு மங்கலம் தாலூக்காவில் பிரவேசித்து, இராமநாதபுரம் ஜில் லாவின் வழியாய் ஓடிக்கடலில் சங்கமமாகிறது.

வரிசலையாறு:—இந்நதி இஜ்ஜில்லாவின் வடக்கே உற் பத்தியாகி, மேலூர் தாலூக்காவின் வழியாய்ச் சென்று இராமநாதபுரம் ஜில்லாவில் பிரவேசித்துக் கடைசியில் கட லில் சங்கமமாகின்றது.


ஷண்முக நதி;—இந்நதியானது கொன்றை நதி, சாம தீர்த்தம், சுத்தநதி, மயோர்த்தம், ஞானநதி, மயூரநதி என்ற ஆறு நதிகள் ஒன்று சேர்ந்து ஷண்முகநதி என்ற பெயருடன் பழனிக்கு மேற்கே ஒரு மைல் தூரத்தில் ஓடுகிறது. இந்நதி பழனிமலைகளில் உற்பத்தியாகி, வடதிசையாக ஓடி, பழனித்தாலூக்காவின் மேற்கு எல்லையாகிய அமராவதி நதியுடன் கலந்து கோயம்புத்தூர் ஜில்லாவில் பிரவேசிக்கிறது. இது ஓர் முக்கியமான ஜீவநதி.

குடவனாறு;—இந்நதி திண்டுக்கல் தாலூக்காவிலுள்ள மலைகளில் உற்பத்தியாகி, வடக்குப் புறமாகக் கோயம்புத்தூர் ஜில்லாவில் பிரவேசிக்கிறது.

## 20. வாய்க்கால்களும் ஏரிகளும்

பெரியாறு கால்வாய்;—சுமார் 21 வருஷங்களுக்கு முன் இதை வெட்டப்பட்டது. திருவாங்கூர் ராஜ்யத்திற்குட்பட்ட மேற்குத் தொடர்ச்சி மலையில் பெரியாறு என்னும் ஒரு ஆறு கிழக்கு மேற்காய் ஓடி, ஒருவருக்கும் பயன்படாமல் அரபிக்கடலில் விழுந்து கொண்டிருந்தது. இதைக் கர்னல் பென்னிக்கு என்ற எஞ்சினியர், விவசாயத்திற்கு உபயோகப்படுத்த வேண்டுமென்று எண்ணி, அதிக பிரயாசை எடுத்து, சர்க்காருக்கு இதனால் வரும் ஊதியத்தைத் தெரிவித்து, இதை இராஜாங்கத்தாரால் இக்கால்வாயை வெட்டி ஜனங்களுக்கு விபசாயத்திற்கு உபயோகப்படும்படி செய்தார். ஆங்கில இராஜ்ஜியத்திற்கும், திருவாங்கூர் இராஜ்ஜியத்திற்கும் மத்தியிலுள்ள குமிழி என்ற இடத்திற்குச்

பெரியாறு அணைக்கட்டு



சுமார் 8 மைல் தூரத்தில் ஓடிக்கொண்டிருந்ததைக் கவனித்துக் குறுக்கே 22 மைல் விஸ்தீரணத்தில் ஜலத்தைத் தேக்கி வைக்க ஒரு அணைகட்டி, இந்நதிக்கு வடக்கிலுள்ள மலையைத் துளைத்து, அவ்வழியாக ஜலத்தைக் கால்வாய் மூலமாகக் கொண்டு வந்தார்கள். இப்பெரியாற்றுக்கு முல்லையாறு என்ற மறுபெயருமுண்டு. இக்கால்வாய் கம்பம், கூடலூர், சோழவந்தான், மேலூர்தாலூக்கா, மதுரைத் தாலூக்கா இவ்விடங்களில் நடக்கும் விவசாயத்திற்கு உபயோகமாகிறது. இக்கால்வாய் வருவதற்கு முன் புன்செய் நிலங்களாயிருந்தவையாவும் இக்கால்வாயின் மூலம் ஜலம் வந்ததின் பின், அந்நிலங்கள் யாவும் நன்செய் நிலங்களாகிவிட்டன. அந்நிலங்களில் மூன்று போகங்கள் விளைகின்றன. பெரியாற்று நீரை நிலக்கோட்டைத் தாலூக்காவைச் சேர்ந்த அணைப்பட்டி என்னுமிடத்தில் வைகை ஆற்றின் வழியாய் தண்ணீர் சென்று விடாமல், ஒரு அணை கட்டப்பட்டு, அங்கிருந்து பிரிந்து செல்லும் [illegible]யை பன்னிரண்டு சிறு கால்வாய்களின் மூலமாய், மேற்கூறிய இடங்களிலுள்ள நிலங்களுக்குத் தண்ணீர் பாய்ச்சப்படுகின்றது. பெரியாற்று நீரைப் பன்னிரண்டு கால்வாய்களாகப் பிரித்து, நிலக்கோட்டைத் தாலூக்காவிற்கு 1, 2, கால்வாய்களும், மதுரைத் தாலூக்காவிற்கு 3, 4, 5, 6, 7, 8, 9 கால்வாய்களும், 10வது கால்வாய் மேலூர் தாலூக்காவிற்கும் மதுரைத் தாலூக்காவிற்கும் வடக்குத், திசையின் மத்தியிலும், மேலூர் தாலூக்காவிற்கு 11, 12 கால்வாய்களும் போகிறது. இவை, இராமநாதபுரம் ஜில்லாவிலுள்ள சிவகெங்கை ஜமீனைச்சேர்ந்த, தமராக்கியம் கிராமத்திலுள்ள கண்மாயில் விழுகிறது.

இஜ்ஜில்லாவிலிருக்கும் ஏரிகள் மிகச்சிறியவை. ஏரிகளுக்குக் கண்மாய் என்று பெயருண்டு, இவ்விடங்களிலுள்ள ஜனங்கள், அவரவர்களின் உபயோகத்திற்காக வெட்டப்பட்ட ஏரிகளே தவிர இயற்கையிலுண்டான ஏரிகளல்ல.

பெரியாற்று ஏரி:—. இவ்வாற்று ஏரியைப்பற்றி முன் பாடத்தில் படித்திருக்கிறீர்களல்லவா? இந்த ஏரியிலிருந்துதான் பெரியாற்றுக்கும், இவ்வாற்றிலிருந்து பிரியும் சிறு கால்காய்களுக்கும் தண்ணீர் வருகிறது.

மாடக்குளத்து ஏரி:— இந்த ஏரி மதுரைக்கு 2 மைல் தூரத்திற்கப்பாலுள்ளது. இந்த ஏரி சுமார் 3 மைல் சுற்றளவுள்ளது. இந்த ஏரி உடைந்தால், மதுரைப் பட்டணம் அழிந்துவிடுமென்று சொல்லுவார்கள். மழை காலத்தில் தான் இந்த ஏரியில் ஜலமிருக்கிறது.

## 21. சீதோஷ்ண ஸ்திதி

ஒரு இடத்தின் நிலைமையை அறியவேண்டுமானால் அவ்விடம் உஷ்ணமாயிருக்கிறதா, அல்லது குளிர்ச்சியாயிருக்கிறதா, என்பதை தெரிந்துகொள்வதுதான் சீதோஷ்ண ஸ்திதி. சீதோஷ்ண ஸ்திதியின் அர்த்தம் என்னவென்றால் சீதம்-குளிர்ச்சி, உஷ்ணம்-சூடு, ஸ்திதி-நிலைமை. ஓரிடத்திலுள்ள ஜனங்களின் நடையுடை பாவனைகளும், ஜீவவர்க்கம், விருட்சவர்க்கம் முதலியவைகளும் சீதோஷ்ண ஸ்திதியைப் பற்றினவையாயிருக்கின்றன. நாம் வசிக்கும் இஜ்ஜில்லாவானது உள்நாட்டிலிருப்பதால், கோடைகாலத்தில் உஷ்ணமாகவும், மழைகாலத்தில் குளிராகவுமிருக்கின்றன. இங்குள்ள மலைகளில், கோடைகாலத்திலும், மழைகாலத்திலும்

குளிர்ச்சியாகவே இருக்கின்றன. மார்ச்சு, ஏப்ரல், மே, ஜூன் இம்மாதங்களில் உஷ்ணமாயும் செப்டெம்பர், அக்டோபர், நவம்பர், டிசம்பர் இம்மாதங்களில் மழையாகவுமிருக்கின்றன. இஜ்ஜில்லாவில் ஒரு வருஷத்தில் பெய்த அளவு அடுத்த வருஷத்தில் அம்மாதிரி மழை பெய்கிறதில்லை. நமது இராஜதானியில் அடிக்கும் தென்மேற்குப் பருவக்காற்றும், வடகிழக்குப் பருவக்காற்றும், இவ்விரண்டும் இஜ்ஜில்லாவில் அடித்து மழைபெய்யச் செய்கிறது தென்மேற்குப் பருவக்காற்றால் அடித்துக்கொண்டு வரும் மழையானது சாரல் போன்றடிக்கிறது. வடகிழக்குப் பருவக்காற்றால், கொண்டு வரும் மழையானது அதிகமாய்ப் பெய்கிறது. வடகிழக்குப் பருவக்காற்று இஜ்ஜில்லாவில் அற்பசி மாதத்தில் அடிக்கிறது. தென்மேற்குப் பருவக்காற்றுஇஜ்ஜில்லாவில் வைகாசி மாதத்தின் பின் பாதிக்குமேல் அடிக்கிறது. இம்மாதத்தில் அடிக்கும் மழையைக் கோடைமழை என்று சொல்வர். பருவக்காற்று என்றால் சரியான காலத்தில் அடிக்கும் காற்றுக்குப் பருவக்காற்று என்று பெயர்.

## 22. விளை பொருள்கள்

மூலவர்க்கம்:— இஜ்ஜில்லாவில் நெல், கம்பு, சோளம், தினை, கரும்பு, பருத்தியும், திண்டுக்கல், பழனி இத்தாலூக்காக்களில் புகையிலையும், இஜ்ஜில்லாவிலுள்ள மலைநாடுகளில், காப்பி, தேயிலை, வாழை, பலவகையான கிழங்குகளும், ஆற்றோரங்களில் தென்னைமரங்களும் இன்னு சில பயிர்களும் பயிர் செய்யப்படுகின்றன.

உலோகங்கள்:— பழனிமலையின் சமீபத்தில் கொஞ்சம் பொன் கிடைத்திருந்தன. இப்பொழுது கிடையாது

மதுரைக்கு 32 மைல் தூரத்திலுள்ள கொட்டாம்பட்டியில் இரும்பு கிடைக்கின்றன. பசுமலைக்குன்றில் கொஞ்சம் சீமைச் சுண்ணும்பு கிடைக்கின்றன. இன்னும் மற்ற உலோகங்களும் சிற்சில இடங்களில் கொஞ்சம் கிடைக்கின்றன.

மிருக இனம், பறவை இனம்:- புலி, ஓநாய், நரி, மந்தி, தேவாங்கு, காட்டு எருமை முதலிய காட்டுப்பிராணிகளும், பசு, எருமை வீட்டுப் பிராணிகளும் இஜ்ஜில்லாவில் இருக்கின்றன. கோழி, வாத்து, கிளி, மைனு, புரு, குருவி, காகம், கொக்கு, காடை, கழுகு, பருந்து, வல்லூறு முதலிய பக்ஷிகளும் இஜ்ஜில்லாவில் உண்டு.

## 23. கைத்தொழில், ஏற்றுமதி, இறக்குமதி

இஜ்ஜில்லாவில் நடக்கும் தொழில்களில் முதன்மையானது விவசாயத்தொழில். பிறகு இஜ்ஜில்லாவில் சாயம் போடுதலும், துணி நெய்தலும் விசேஷமாய் நடக்கின்றன. மதுரையில், சௌராஷ்டிரர்களால் ஜரிகை வேஷ்டிகளும், புடவைகளும், சுங்கடிச் சேலைகளும், அச்சுக்கட்டு ரேக்குப் புடவைகளும், பட்டு வஸ்திரங்களும், நெய்யப்படுகின்றன. இஜ்ஜாதியார்கள் இன்னும், சாயமேற்றும் தொழிலும் செய்கிறார்கள். மதுரையில் இன்னும், பலவிதப் பாத்திரங்கள் செம்பினாலும், பித்தளையினாலும் செய்யப்படுகின்றன. திண்டுக்கல்லில் வெங்கலப்பாத்திரங்களின் தொழில் அதிகமாய் நடக்கின்றன.

இன்னும் திண்டுக்கல்லில் புகையிலையினால் செய்யப்படும் சுருட்டுகளில் பலவகையுடன் செய்யப்படுகின்றன. திண்டுக்கல்லில் இரும்புப்பெட்டிகள் (பொட்டகம்) செய்வ

துடன், சம்பளமும் செய்கிறார்கள். இஜ்ஜில்லாவில் ஆடு மாடுகள் மேய்த்தலும், ஆடுமாடுகளின் தோல்களை பதமிகுதலும் நடக்கின்றன. இஜ்ஜில்லாவிலிருந்து வெண்கலப் பாத்திரங்கள், சுருட்டுகள், இரும்புப்பெட்டிகள், சாய வேஷ்டிகள், பட்டு வஸ்திரங்கள், காப்பிக்கொட்டை, சிறுமலைப் பழங்கள், தோல் முதலியவைகள் மற்ற நாடுகளுக்கு அனுப்பப்படுகின்றன. இதர நாடுகளிலிருந்து, மண் எண்ணெய், தீப்பெட்டி, கண்ணாடிச் சாமான்கள், காகிதங்கள், சீமைத்துணிகள், இயந்திரங்கள் முதலியவைகள் வரவழைக்கப்படுகின்றன. இவ்விதம் மற்ற நாடுகளிலிருந்து வரவழைப்பதற்கு இறக்குமதி என்றும், ஓர் ஊரிலிருந்து மற்ற ஊர்களுக்குச் சாமான்களை அனுப்புவதற்கு ஏற்றுமதி என்றும் பெயர்.

## 24. போக்கு வரவுக்குரிய மார்க்கங்கள்

ஜனங்களுக்குப் போக்கு வரவு செய்ய சௌகரியமாய் இருப்புப்பாதைகளும், வண்டிப்பாதைகளும் போடப்பட்டிருக்கின்றன. மதுரையிலிருந்து நிலக்கோட்டை, திண்டுக்கல் தாலூக்காக்களின் வழியாய் திருச்சிராப்பள்ளிக்கும், மதுரையிலிருந்து மேலூர் தாலூக்காவின்வழியாய் இராமநாதபுரம் ஜில்லாவுக்கும் மதுரையிலிருந்து நேர் கிழக்கே இராமநாதபுரம் ஜில்லாவுக்கும மதுரையிலிருந்து திருமங்கலம் தாலூகாவின் வழியாய் திருநெல்வேலி ஜில்லாவுக்கும், மதுரையிலிருந்து உசிலம்பட்டி, உத்தமபாளையம் வழியாய் பெரியாற்றின் அணைக்கட்டுக்கும், உத்தமபாளையத்திலிருந்து பெயகுளத்துக்கும், பெரியகுளத்திலிருந்து போடிநாயக்க

னூருக்கும், அம்மையநாயக்கனூருக்கும் வண்டிப்பாதைகள் போடப்பட்டிருக்கின்றன. மேலூரிலிருந்து கொட்டாம் பட்டிக்கும், சிவகங்கை ஜமீனுக்கும், திருப்பூவனத்திற்கும் வண்டிப்பாதைகள் பிரிகின்றன. இதில் சில வண்டிப்பாதை கள் ராணி மங்கம்மாளால் போடப்பட்டவை. இன்னும் மதுரையிலிருந்து பிள்ளையார் பாளையத்தின் வழியாய் இராம நாதபுரம் ஜில்லாவிலுள்ள அருப்புக்கோட்டைக்கு ஒரு வண் டிப்பாதை போகிறது. பழனித்தாலூக்காவிற்கு திண்டுக் கல்லிலிருந்து வண்டிப்பாதை போகிறது. கொடைக்கானல் தாலூக்காவிற்கு பெரிய குளத்திலிருந்து வண்டிப்பாதை போகிறது.


இருப்புப்பாதை:—நமது ஜில்லாவிற்கு வடகிழக்கிலுள்ள சென்னப்பட்டணத்திலிருந்து, தென் இந்திய இருப்புப் பாதை (S. I. R.) நமது ஜில்லாவின் வழியாய் திருவனந்த புரத்துக்கும், தனுஷ்கோடிக்கும், போகிறது. சென்னப் பட்டணத்திலிருந்து வரும் இருப்புப்பாதையானது, மதுரை ஜில்லாவின் எல்லைக்குட்பட்ட அய்யலூர், வடமதுரை, திண் டுக்கல், வெள்ளோடு, அம்பாத்துறை, கொடைக்கானல் ரோட், வாடிப்பட்டி, கருப்பட்டி, சோழவந்தான், சமயநல் லூர், இந்த ஸ்டேஷன்களைக் கடந்து, மதுரைக்கு வந்து, இதிலிருந்து, இஜ்ஜில்லாவின் எல்லைக்குட்பட்ட பசுமலை, திருப்பரங்குன்றம், கப்பலூர், திருமங்கலம், கள்ளிக்குடி, இவைகளைக் கடந்து திருநெல்வேலி ஜில்லாவிற்குப் போகி றது. மதுரை ஜங்ஷனிலிருந்து தனுஷ்கோடிக்குப் போகும் இருப்புப்பாதை மார்க்கத்தில், இஜ்ஜில்லாவிற்குட்பட்ட ஸ்டேஷன் கீழ்மதுரை ஒன்றே. திண்டுக்கல்லிலிருந்து,

பழனிக்குப்போகும் இருப்புப்பாதை ஒட்டன் சத்திரம் பழநி முதலிய ஸ்டேஷன்கள் மூலமாக பொள்ளாச்சிக்கும் போகிறது. மதுரையிலிருந்து செக்கானூரணி, உசிலம்பட்டி, ஆண்டிபட்டி, வழியாக போடிநாயக்கனூருக்கும் ஓர் இருப்புப் பாதை போகிறது.

## 25. ஜனங்கள், மதங்கள், பாஷைகள்

ஜனநெருக்கமுள்ளதெனவும், ஜனநெருக்கமில்லாதென வும் இருவகையாய்ப் பிரிக்கலாம். அதில் ஜனநெருக்க முள்ள தாலூக்காக்கள் மதுரை, நிலக்கோட்டை, திருமங் கலம். இதில் மதுரை தாலூக்காவில் அதிக ஜனநெருக்க முள்ளன. ஜனநெருக்க மில்லாத தாலூக்கா கோடைக் கானல். பிள்ளைகளே, நீங்கள், 1921வருடல் சிலர் ஒவ்வொரு வீடுகளிலும் வந்து, வீட்டில் எத்தனை ஆண்கள், பெண்கள், குழந்தைகள் என்று கேட்டு, அவர்கள் கொண்டுவந்த புஸ்த கங்களில் குறித்துக்கொண்டு போனதைக் கவனித்திருப்பீர் கள். அவ்வருஷத்தில் சென்ஸஸ் கணக்குப்படி 20, 0, 7,082 ஜனங்கள் வசிக்கிறார்களென்று கணக்கிட்டிருக்கிறார்கள். அதன்படி நமது ஜில்லாவில் ஒரு சதுர மைலுக்கு சராசரி 408 பேர்கள் வசிக்கிறார்கள். இஜ்ஜில்லாவிலுள்ள கள்ளர் கள், திருட்டுத்தொழிலேயே கைக்கொண்டிருந்தார்கள். இப் பொழுது இராஜாங்கத்தார், இவர்களுக்கு இலவசக்கல்வியும், கைத்தொழிலும் கற்றுக்கொடுத்து முன்னுக்கு கொண்டு வருகிறார்கள். திருமங்கலம் தாலூக்காவில் மூப்பரென்ற ஒருவகை ஜாதியார் மிகுதியாய் வசிக்கிறார்கள். இவர் களுடைய முக்கியத்தொழில் நெசவு. மதுரையில் கொடுக் கல் வாங்கள் செய்யக்கூடிய வட்டிக்கடைகளும், ஜவுளிக் கடைகளும் வைத்து நாட்டுக்கோட்டைச் செட்டிகள் என்ற,

மதுரை டவுன்



ஜாதியார்கள் மேற்சொன்ன வியாபாரங்களைச் செய்கிறார்கள். இவர்களுடைய ஊர்கள் இராமநாதபுரம் ஜில்லாவிலிருக்கின்றன. அவைகளில் முக்கியமான ஊர்கள், காரைக்குடி தேவகோட்டை முதலியன.

**மதங்கள்:**—இஜ்ஜில்லாவில் இந்து மதம், முகம்மதிய மதம், கிறிஸ்து மதம். இம்மூன்று மதஸ்தர்களும் இருக்கிறார்கள். இதில் இந்து மதஸ்தர்கள் அதிகமாயும், முகம்மதியமதஸ்தர்களும், கிறிஸ்து மதஸ்தர்களும் குறைவாகவுமிருக்கிறார்கள். பழனித்தாலூக்காவில் முகம்மதியர்களும், கொடைக்கானல், திண்டுக்கல், தாலூக்காக்களில் கிறிஸ்தவர்களும் அதிகமாயிருக்கிறார்கள்.


**பாஷைகள்:**—இஜ்ஜில்லாவில் அதிகமாய் வழங்கும் பாஷை தமிழ். மற்ற பாஷைகளும் சிறிது பேசப்படுகின்றன. நமது ஜில்லாவிலும் ஆங்கில பாஷையும் கற்கப்பட்டு வருகின்றது. ஸௌராஷ்டிரா என்ற ஜாதியார், அவர்கள் பேசும் ஸௌராஷ்டிர பாஷையையே பேசுகிறார்கள்.

## 26. தாலூக்காக்களும் அதன் பட்டணங்களும்

### 1. மதுரைத் தாலூக்கா


**எல்லைகள்:**—படத்தைப் பார்த்து இத்தாலூக்காவின் எல்லைகளைச் சொல்லுக.

**மதுரை:**—நாம் வசிக்கும் ஜில்லாவின் பெயர் மதுரை. இம்மதுரை ஜில்லாவின் முக்கியபட்டணம் இதுவே. இது வைகையாற்றின் தென்கரையில் பெரும்பாகமும், வடகரையில் சிறுபாகமுமுள்ளது. இஜ்ஜில்லாவை முன் பாண்டியராசர்கள் ஆண்டுவந்தார்கள். அன்று முதல் இதற்கு பாண்டிய நாடு என்று பெயர். நாம் வசிக்கும் சென்னை ராஜதானியில் இம்மதுரையானது இரண்டாவது நகரமாயிருக்கிறது. இது



பொற்றாமரைக்குளம்

ஒரு முனிசிபல் பட்டணம். இவ்வூரில், மீனாக்ஷியம்மன் கோவில், அதிலுள்ள ஆயிரக்கால் மண்டபம், நாரைக்கு முத்திகொடுத்த பொற்றாமரை என்ற தடாகமும் தங்கக்கோபுரமும் சுவாமி சன்னதிக்குக் கீழ்புரத்திலுள்ள புதுமண்டபம், எட்வர்டுபார்க், திருமலை நாயக்கர் அரண்மனை, மாரியம்மன் தெப்பக்குளம் இவைகள்முக்கியமான கட்டிடங்கள். தவிர இம் மதுரைமா நகரில் ஆறு ஹைஸ்கூலும், இரண்டு




தங்கக்கோபுரம

பெரிய கலாசாலைகளும் இருக்கின்றன. இரண்டு பெரிய கலாசாலைகளில் ஒன்று தள்ளாகுளத்திலிருக்கிறது. இதன்பெயர் அமெரிக்கன் காலேஜ். மற்றொன்று ரயில்வேஸ்டேஷன் சமீபத்தில் இருக்கிறது. இதன் பெயர் மதுரைக் காலேஜ் இவைகளைத்தவிரப் பஞ்சாபீஸ்களும், மதுரை கலெக்டர் ஆபீஸும், இராமநாதபுரம் கலெக்டர் ஆபீஸும், மதுரை ஜில்லா போர்டு ஆபீஸும் இன்னும் மற்ற ஆபீஸ் முதலியனவும் இம்மதுரைமாநகரிலிருக்கின்றன. இன்னும் மதுரை நகர பரிபாலன சபையாரால் ஏற்படுத்தப்பட்ட ஸெகெண்ட் கிரேட் எலிமெண்டரி பாடசாலைகள் முப்பத்தொன்பது இருக்கின்றன. இவைகளைத்தவிர பெண்பாடசாலைகளும் இச்சபையாரால் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. இன்னும், கவர்ன்மெண்ட், மிஷன், ஆஸ்பத்திரிகளும், நகரபரிபாலன சபையாரால் ஏற்படுத்தப்பட்ட பல ஆஸ்பத்திரிகளும் உண்டு. மதுரையில் மீனாக்ஷியம்மன் கோவிலைச்சுற்றியுள்ள ஆடிவீதிகள், சித்திரை வீதிகள், ஆவணிமூல வீதிகள், மாசி வீதிகள், மாரட்டு வீதிகள், வெளிவீதிகள், இவைகள் அகலமாகவும், ஒழுங்காகவுமிருப்பது மிகவும் பார்க்கத்தக்கவை. இந்நகரில் ஒவ்வொரு மாதமும் உத்ஸவங்கள் நடக்கின்றன. இவ்வுத்ஸவங்களில் மிகவும் முக்கியமானது, சித்திரை உத்ஸவம், பிட்டு உத்ஸவம், தெப்பஉத்ஸவம். இவ்வுத்ஸவங்களுக்கு நான்கு பக்கங்களிலிருந்தும் ஆயிரக்கணக்கான ஜனங்கள் வந்து போகிறார்கள். இம்மதுரை, தனுஷ்கோடிக்குப் போகும் மார்க்கத்திலிருப்பதால், இங்கு, யாத்திரிகர்களும், வியாபாரிகளும் அதிகமாயிருக்கின்றார்கள். மதுரை ஒரு ஜங்ஷன். இங்கிருந்து தூத்துக்குடிக்கும்,திருநெல்வேலிக்கும்ஒரு இருப்புப்பாதையும், கிழக்குப் பக்கத்தில் தனுஷ்கோடிக்கு ஒரு இருப்புப்பாதையும், வடக்கே திருச்சிராப்பள்ளி வழி

யாய்ச் சென்னைக்கு ஒரு இருப்புப்பாதையும் போகிறது. மதுரை ஜங்ஷனுக்குக் கீழ்புறத்தில் மங்கம்மாள் என்ற அரசி யின் பெயரால் ஒரு சத்திரம் கட்டப்பட்டிருக்கிறது. அதில் யாத்திரிகர்கள் வந்து தங்குவதற்குச் சௌகரியமாயிருக்கி றது. காலஞ்சென்ற ஸ்ரீபாண்டித்துரைச்சாமித்தேவர் அவர் களால் ஏற்படுத்தப்பட்ட தமிழ்ச்சங்கமும் இங்கு நடை பெற்று வருகின்றது. இவ்வூரில் ஸௌராஷ்டிரர் என்ற ஜாதி யார் அதிகமாய் வசிக்கிறார்கள். இவர்களுடைய பாஷை ஸௌராஷ்டிர பாஷை. இவர்கள் பலவித வஸ்திரங்கள் நெய்து பல விடங்களுக்கு ஏற்றுமதி செய்கிறார்கள். இவ் வூரில் எலெக்டிரிக் விளக்குகளும் ரஸ்தாக்களுக்குத் தாரும் போடப்பட்டிருக்கிறது.

**பசுமலை:**—இவ்வூர் மதுரைக்குத் தெற்கே மூன்று மைல்தூரத்திலுள்ளது. இது ஒரு ரயில்வேஸ்டேஷன். இவ்வூரில் ஒரு அமெரிக்கன்மிஷன் ஹைஸ்கூலும், ட்ரைனிங் ஸ்கூலும், கிறிஸ்துமதப் பள்ளிக்கூடமும், மாடல் ஸ்கூலும் இருக்கின்றன. இப்பெயர்கொண்ட குன்றின் அடிவாரத் தில் குடிப்பதற்கு இனிமையாயுள்ள தண்ணீர் அங்குள்ள கிணற்றில் கிடைக்கிறது. இத்தண்ணீரை வண்டிகளில் மதுரைக்குக் கொண்டுவருகிறார்கள். இக்குன்றிலிருந்து சரளைக்கற்களை பல இடங்களுக்கு ரஸ்தாக்கள்போட உபயோ கப்படுத்துகிறார்கள்.

**திருப்பரங்குன்றம்:**—இது மதுரைக்குத் தென்மேற்கே 4 மைல் தூரத்திலுள்ளது. இத்தாலூக்காவிலுள்ள யாத் திரை ஸ்தலங்களில் இது ஒன்று. இங்கு சுப்ரமண்யரின் ஆலயம் உண்டு. இவ்விடத்திற்கு ஒவ்வொரு மாதத்தில்



திருப்பரங்குன்றம் மலை

கார்த்திகை தினங்களிலும், சோமவாரத் தினங்களிலும் ஏராளமாக ஜனங்கள் வந்துபோவதுண்டு. கார்த்திகைமாதத்தில் வரும் கார்த்திகையன்று நான்கு பக்கங்களிலிருந்தும் ஆயிரக்கணக்கான ஜனங்கள் இங்குவருவார்கள். இங்குள்ள குன்றின்மீது சிக்கந்தர் என்ற முகம்மதியருடைய சமாதி உண்டு. இவ்விடத்திற்கு முகம்மதியர்கள் வந்து போகிறார்கள்.

யானைமலை:—மதுரைக்கு 5 மைல் தூரத்திலுள்ளது. இங்கு ஜயின விக்கிரகங்களிருக்கின்றன.

ஜமீன்கள்:—வெள்ளியங்குன்றம், சிறுவாலை.

மலைகள்:—பசுமலை, ஸ்கந்தர்மலை, யானைமலை.

நதிகள்:—வைகை, கிளைநதி கிருதமாலை, பெரியாற்றுக் கால்வாய்கள் 12ல் 9 கால்வாய்கள் ஓடுகிறது. மதுரைத் தாலூக்காவுக்கும் மேலூர்த்தாலூக்காவுக்கும் மத்தியில் 10 கால் போகிறது.

## II. மேலூர்த் தாலூக்கா

எல்லைகள்:—வடக்கே திருச்சிராப்பள்ளி ஜில்லாவும், புதுக்கோட்டை ராஜ்யமும், தெற்கேயும் கிழக்கேயும் இராமநாதபுரம் ஜில்லாவும், மேற்கே, மதுரை, நிலக்கோட்டை, திண்டுக்கல் தாலூக்காக்களுமிருக்கின்றன.

மேலூர்:—இப்பட்டணம், இப்பெயர்கொண்ட தாலூக்காவின் முக்கிய பட்டணம். இதுமதுரைக்கு வடகிழக்கில் 18 மைல் தூரத்திலுள்ளது. இங்கு தாலூக்கா ஆபீஸும், முனிஸீப்கோர்ட்டும், சப்ரிஜிஸ்டராபீஸும், இன்னும் பல வேண்டிய ஆபீஸுகளுமிருக்கின்றன. இது முன் காலத்தில் கள்ளர்களுடைய இராஜதானியாயிருந்தது. இங்கு திங்கள் கிழமைதோறும் ஒரு சந்தை கூடுகிறது. இவ்விடத்திற்கு பல கிராமங்களிலிருந்து திரளான ஜனங்கள் வந்து வியாபாரம் செய்து போகிறார்கள். பெரியாற்றுத்தண்ணீர் இத்தாலூக்காவில் வந்ததின்பின், இங்குள்ள புன்செய்நிலங்களில் பல நன்செய் நிலங்களாகிவிட்டன. இங்கு நெல், துவரை, உளுந்து முதலிய தானியங்கள் விசேஷமாய் விளைகின்றன. இவ்வூருக்குப் பக்கத்திலுள்ள பெரிய ஆலமரத்தை எல்லோரும் பார்க்கத்தக்கது. இப்பெயர்கொண்ட தாலூக்காவில் சுமார் 125 போர்டு எலிமெண்டரி பாடசாலைகளிருக்கின்றன.

அழகர்கோவில்:—இப்பெயர்கொண்ட மலையின் அடிவாரத்திலுள்ள ஒரு சிறந்த விஷ்ணு ஸ்தலம். இது மது

ரைக்கு வடமேற்கில் 12 மைல் தூரத்திலுள்ளது. இக்கோவிலில் அழகரென்று பெயர் வாய்ந்த சுந்தரராஜப் பெருமாளிருப்பதால் இக்கோவிலுக்கும், இங்குள்ள மலைக்கும் இப்பெயர் வரலாயிற்று. இங்கு திருமலை நாயக்கரால் கட்டப்பட்ட பல கட்டிடங்களிருக்கின்றன. ஆடி மாதம் அமாவாசை முதல் பௌர்ணமி வரையில் இங்கு ஆடித்திருவிழா நடக்கிறது. ஆடிப்பௌர்ணமி தினத்தில், நான்கு பக்கங்களிலிருந்தும் திரளான ஜனங்கள் சந்தனக் குடங்கள் கொண்டுபோய் அங்குள்ள பதினெட்டாம்படிக் கருப்பன் என்று சொல்லப்பட்ட கோவிலின் கதவில் கொண்டு வந்த சந்தனத்தைச் சாத்துப்படி செய்கிறார்கள். ஆடி அமாவாசை தினத்தில் ஏராளமான ஜனங்கள், அங்கு மலையிலுள்ள காசிதீர்த்தம் என்று சொல்லப்பட்ட அருவியின் தீர்த்தத்தில், தீர்த்தமாடிப்போகிறார்கள். இங்குள்ள கடவுளினிடத்தில் கள்ளர்கள் அதிக பக்தியுடன் கொண்டாடுவதால், இக்கடவுளைக் கள்ளழகர் என்று சொல்வதுண்டு. இக்கள்ளழகர் வருஷத்திற்கு ஒருதரம் சித்திரைபௌர்ணமி தினத்தில் மதுரைக்கு எழுந்தருளுகிறார். அப்போது ஆயிரக்கணக்கான ஜனங்கள் வரக்கூடிய பெரிய உத்ஸவம் நடக்கிறது.

**நத்தம்:**—இவ்வூர் மதுரைக்கு வடகிழக்கில் 22 மைல் தூரத்திலுள்ளது. இவ்வூர் ஒரு யூனியன் பட்டணம். இங்கு ஒரு சப்ரிஜிஸ்டர் ஆபீஸ் உண்டு. இங்கு கள்ளர்கள் அதிகம். எண்ணெய் வியாபாரம் மிகுதியாய் இங்கு நடக்கின்றது. இங்கு ஒரு இந்துப்பள்ளிக்கூடமும், மகமதியப் பள்ளிக்கூடமும், ஆதித்திராவிடப் பள்ளிக்கூடமுமிருக்கின்றன.

**கோட்டாம்பட்டி:**—இது மேலூருக்கு 14 மைல் தூரத்தி லுள்ளது. இங்கு கொஞ்சம் இரும்பு அகப்படுகிறது. இராமேஸ்வரம் போகும் யாத்திரைக்காரர்களுக்கு முன் காலத்தில் இது ஒரு தங்குமிடமாயிருந்தது. இவ்வூரிலிருந்து திருச்சிராப்பள்ளிக்கு ஒரு வண்டிப்பாதை போகிறது.

**திருவாதவூர்:**—இது மேலூருக்குத் தெற்கே 6 மைல் தூரத்திலுள்ளது. முன்காலத்தில் இது மதுரையை ஆண்டு வந்த பாண்டிய ராஜனிடம் மந்திரியாயிருந்த மாணிக்கவாசகர் பிறந்த இடம். திருவாசகம், திருக்கோவையார் என்ற மேன்மையான தமிழ்நூல்களைப் பாடினவர் இவரே.

**மலைகள்:**—அழகர்மலை, கரண்டமலை.

**நதிகள்:**—திருமணி, முத்தாறு, வரிசிலையாறு, பெரியாற்றுக் கால்வாய்களில் 11, 12வது கால்வாய்கள் ஓடுகிறது.

## III. திருமங்கலம் தாலூக்கா

இத்தாலூக்காவிலுள்ள நிலங்கள் கரிசல் நிலங்களாயிருப்பதால், இங்கு பருத்தி விசேஷமாய்ப் பயிராகின்றன. கிணற்று நீரால் விவசாயம் நடக்கிறது.

**எல்லைகள்:**—இத்திருமங்கலம் தாலூக்காவிற்கு வடக்கே நிலக்கோட்டைத் தாலூக்கா, கிழக்கே மதுரைத் தாலூக்கா, இராமநாதபுரம் ஜில்லா, தெற்கே இராமநாதபுரம் ஜில்லா மேற்கே பெரியகுளம் தாலூக்கா இவைகள் எல்லைகளாயிருக்கின்றன.

**திருமங்கலம்:**—இது இத்தாலூக்காவின் முக்கிய பட்டணம். இது ஒரு ரயில்வேஸ்டேஷன். இங்குள்ள குண்டாற்று

நதிக்கரையில் இவ்வூர் இருக்கிறது. இப்பட்டணம் மதுரைக்குத் தென்மேற்கே 18 மைல் தூரத்திலுள்ளது. இங்கு வெள்ளிக்கிழமைதோறும் ஒரு பெரிய சந்தை கூடுகிறது. இப்பெயர்கொண்ட தாலூக்காவில் போர்டு எலிமெண்டரி பாடசாலைகள் சுமார் 120 இருக்கின்றன. இவ்வூரில் போர்டு முதல்தர எலிமெண்டரிப் பாடசாலையும், நாடார்கள் ஏற்படுத்திய பாண்டியகுல க்ஷத்திரிய நாடார்கள் ஹைஸ்கூலும் இருக்கின்றன. இங்கு பஞ்சாலை ஒன்று உண்டு. இங்கு முனிஸீப் கச்சேரியும், தாலூகாக்கச்சேரியும், சப்ரிஜிஸ்டராபீஸும், இன்னும் சில கச்சேரிகளும், ஆஸ்பத்திரிகளும் இருக்கின்றன. இங்கு திருமலை நாயக்கரால் கட்டப்பட்ட சிறு மண்டபம் ஒன்று உண்டு.

**உசிலம்பட்டி**:—இது, திருமங்கலத்துக்கு வடமேற்கே 17 மைல் தூரத்திலுள்ளது. இது ஒரு யூனியன் பட்டணம். இங்கு இந்த டிவிஷன் கலெக்டருடைய கச்சேரியும், சப்ரிஜிஸ்டார் ஆபீஸும், போர்டு ஹைஸ்கூலும் இருக்கின்றன. இவ்விடத்தில் புதன்கிழமைதோறும் ஒரு பெரிய சந்தை கூடுகிறது.

**கள்ளிக்குடி**:—இது ஒரு ரயில்வே ஸ்டேஷன். திருமங்கலத்துக்குத் தெற்கே 9 மைல் தூரத்திலுள்ளது. இங்கு சப்ரிஜிஸ்டார் ஆபீஸ் உண்டு. இவ்வூர் பருத்திவியாபாரத்திற்கு மத்திய இடமாயிருக்கிறது.

**விக்கிரமங்கலம்**:—இங்கு இடிந்துபோன சிவன்கோவில் ஒன்று உண்டு. இது திருமங்கலத்துக்கு வடமேற்கிலுள்ளது.

**ஆனையூர்:**—இது ஒரு சிவஸ்தலம். இங்கு ஒரு குளம் உண்டு. தேவேந்திரனுடைய ஐராதவம் என்ற வெள்ளை யானை, தன் கர்வத்தினால் தன் நிறம் வேறுபட்டதென்றும், இங்குள்ள குளத்தில் ஸ்நானம் செய்தவுடன், தன் பழைய வெள்ளை நிறத்தை அடைந்துவிட்டதாகவும், ஆயுள்காலம் வரையில் இங்கு இருந்ததாகவும் சொல்லுகிறார்கள்.

**கோவிலான் குளம்:**—இங்கு ஜயின கற்சிலைகள் உண்டு. திருமங்கலம் தாலூக்காவிற்கு தெற்கிலுள்ளது.

**முக்கிய ஜமீன்கள்:**—சாப்டூர், சாந்தையூர், பேரையூர், உத்தமநாயக்கனூர், தொட்டப்பநாயக்கனூர், நடுக்கோட்டை, மேலக்கோட்டை, கிழக்கோட்டை, எழுமலை முதலியன.

## IV. பெரியகுளம் தாலூக்கா

இத்தாலூக்கா, நாம்வசிக்கும், மதுரை ஜில்லாவிலுள்ள தாலூக்காக்களில் பெரியது. இது மற்றத் தாலூக்காக்களைக் காட்டிலும் மிகச் செழிப்புள்ளது. இத்தாலூக்காவில் 28 போர்டு எலிமெண்டரி பாடசாலைகள் இருக்கின்றன. இந்தத் தாலூக்காவின் மேற்கிலுள்ள திருவாங்கூர் மலைகளில், காப்பிக்கொட்டை, ஏலக்காய், மற்ற விசேஷமான மரங்களும் உண்டாவதால் அதற்குச் சமீபத்திலுள்ள இப்பெரியகுளத்தில் வியாபாரம் அதிகம் நடக்கின்றது.

**எல்லைகள்:**—மேற்கே திருவாங்கூர் ராஜ்யமும், கிழக்கே திருமங்கலம் தாலூக்காவும், நிலக்கோட்டைத் தாலூக்காவும், வடக்கே கொடைக்கானல் தாலூக்காவும், தெற்கே இராமநாதபுரம் ஜில்லாவுமிருக்கின்றன.

பெரியகுளம்:—இது இப்பெயர்கொண்ட தாலூக்காவிற்கு முக்கிய பட்டணம். இது ஒரு முனிஸிபல் பட்டணம். இவ்வூர் வராகநதிக்கரையிலிருக்கிறது. இவ்வூருக்குச் சமீபத்தில் ஒரு பெரியகுளம் இருக்கிறது. இக்குளத்திலிருந்து சமீபத்திலுள்ள ஊருக்கு இப்பெயர் வரலாயிற்று. இவ்வூருக்கு மேற்கே ஒரு மைல் தூரத்திலுள்ள, கல்லினல் செதுக்கப்பட்ட பசுவின் வாயிலிருந்து சிதம்பரத் தீர்த்தம் என்று சொல்லப்பட்ட ஒரு சிறு நீர் வீழ்ச்சியிருக்கிறது. அங்கு வெள்ளிக்கிழமைதோறும், அமாவாசை தினங்களிலும் பலர் தீர்த்தமாடப்போகிறார்கள். இப்பட்டணத்தில் தாலூக்காக்கச்சேரியும், சப்ரிஜிஸ்டிரார் ஆபீஸும், ஜில்லா முனிஸீப் கோர்ட்டும் ஒரு போர்டு ஹைஸ்கூலும், சுமார் 130 போர்டு எலிமெண்டரி பாடசாலைகளும் இன்னும் சில கச்சேரிகளுமிருக்கின்றன. இப்பட்டணத்தில் நகரபரிபாலன சபையாரால் ஒரு பகல் பள்ளிக்கூடமும், இரண்டு இரவு எலிமெண்டரி பாடசாலைகளும் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன.

உத்தமபாளையம்:—இவ்வூர் பெரியகுளத்துக்குத் தென்மேற்கில் 28 மைல் தூரத்திலுள்ளது. இங்கு பிரஸித்திபெற்ற காளேஸ்திரி கோவில் இருக்கிறது. இங்கு சப்ரிஜிஸ்டர் ஆபீஸும், டிப்டி தாசில்தார் கச்சேரியும் போர்டு ஹைஸ்கூலும் உண்டு. இங்குள்ள திரௌபதை அம்மன் கோவிலில் வருஷத்திற்கொருமுறை பூக்குழி இறங்கும் உற்சவம் நடக்கிறது.

கோம்பை:—இப்பட்டணம் சிறந்த நாய்களுக்குப் பெயர் பெற்ற இடம்.

போடிநாயக்கனூர்:—இவ்வூர் பெரியகுளத்துக்குத்தென் மேற்கே 15 மைல் தூரத்திலுள்ளது. இது ஒரு ஜமீன்

பட்டணம். இங்கு விக்டோரியா மெமோரியல் ஹைஸ்கூல் ஒன்று உண்டு.

சின்னமனூர்:—ராஜஸிம்ம பாண்டியனுல் கட்டப்பட்ட ஒரு கோவில் உண்டு. இது ஒரு யூனியன் பட்டணம். இங்கு பிராமணர்களும், முகம்மதியர்களும் அதிகம். இங்கு சிவப்புக் கல்லில் பலவித கல்நகைகள் செய்கிறுர்கள்.

கண்டமநாயக்கனூர்:—இது ஒரு ஜமீன் பட்டணம்.

கம்பம்:—இங்கு வசிப்பவர்களில் பலர் கன்னடபாஷை பேசுகிறுர்கள். இவர்களைக் கப்பிலியர் என்பர்.

தேவதானப்பட்டி:—இங்கு பிரசித்திபெற்ற காமாக்ஷி அம்மன் கோவில் ஒன்று உண்டு. இக்கோவிலில் மாசிமீ அமாவாசைதோறும் ஒரு உற்சவம் நடக்கிறது. அதற்கு ஏராளமான ஜனங்கள் போகிறுர்கள். இக்கோவிலின் மூலஸ்தானம் கூரை கட்டிடத்தால் கட்டப்பட்டிருக்கிறது. இக்கோவிலில் பூஜை நடத்தவேண்டுமானுல் கதவுக்கு வெளியிலேயே நடத்த வேண்டும். பத்து வருஷத்திற்கொருதரம் அக்கூரைக்கட்டிடத்தை பழுதுபார்க்கிறுர்கள். அந்த அம்மனுடைய உத்தரவின்பேரில் அக்கூரையை பழுதுபார்க்கவேண்டுமாம்.

முக்கிய ஜமீன்கள்:—போடி நாயக்கனூர், இரசப்ப நாயக்கனூர், வடகரை, கண்டமநாயக்கனூர், தேவாரம்.

மலைகள்:—வருஷநாட்டு மலைகள், ஆண்டிப்பட்டி மலைகள், திருவாங்கூர் மலைகள்.


நதிகள்:—வைகையாறும், இதன் உபநதிகளுமான வராகநதி, தேனிநதி, மஞ்சள்நதி, இவைகளும் ஓடுகிறது

## V. திண்டுக்கல் தாலூக்கா

இத்தாலூக்காவில் தண்ணீர் வசதி மிகவும் குறைவு. இந்தத்தாலூக்காவில் சிறுமலைப் பழங்கள் வியாபாரம் அதிகம். புகையிலை விளைச்சல் அதிகமாய் உண்டாகின்றன. இந்தத் தாலூக்காவில் தெற்கே உயரமாகவும் வடக்கே தாழ்வாகவுமிருப்பதால் நதிகள் தெற்கேயிருந்து வடக்கே ஓடுகின்றன.

எல்லைகள்:— மேற்கே பழனித்தாலூக்காவும், கொடைக்கானல் தாலூக்காவும், கிழக்கே திருச்சிராப்பள்ளி ஜில்லாவும், மேலூர் தாலூக்காவும், தெற்கே நிலக்கோட்டைத் தாலூக்காவும், வடக்கே திருச்சிராப்பள்ளி ஜில்லாவும் எல்லைகளாயிருக்கின்றன.

திண்டுக்கல்:—இப்பட்டணம் ஜரிகை வஸ்திரங்களுக்கும், வெண்கலப்பாத்திரங்களுக்கும், புகையிலைச் சுருட்டுக்கும் பெயர் பெற்றது. இது, இப்பெயர் கொண்ட தாலூக்காவின் தலைநகரம். இது முனிசிபல் பட்டணம். இது ஒரு ரயில்வே ஸ்டேஷன். இப்பட்டணத்திற்கருகில் பாறை ஒன்று உண்டு. அப்பாறை பார்வைக்கு ஒரு திண்டுபோலிருப்பதால், இதனருகிலுள்ள ஊருக்குத் திண்டுக்கல் என்று பெயராயிற்று என்பர். இப்பாறையின் மேல் ஒரு கோட்டையும், அக்கோட்டைக்குள் ஒரு சுனையும், இடிந்துபோன அபிராமி அம்மன் கோவிலும் இருக்கின்றன. இப்பொழுது அபிராமி அம்மன் கோவில் ஊருக்குள் இருக்கிறது. இவ்வூரில் ரோமன் காத்தலிக் ஹைஸ்கூலும், முனிஸிபல் ஹைஸ்கூலும், செக்கண்டேரி கிரேட் டிரையினிங் ஸ்கூலும், தாலூக்காக் கச்சே



திண்டுக்கல் மலை

ரியும், சப்ரிஜிஸ்டர் ஆபீஸும், முனிஸீப் கோர்ட்டும், இன்னும் பல கச்சேரிகளும் உண்டு. இங்கிருந்து தோல் ஏற்றுமதியாகிறது. இங்கு இரும்பினால் பணப்பெட்டிகள் செய்யப்படுகின்றன. இப்பட்டணத்தின் வழிபாகத்தான் பழனிக்குப் போகவேண்டும். இங்கு திங்கட் கிழமை தோறும் சந்தை கூடுகிறது.

அம்பாத்துரை:—இங்கு நெசவுத்தொழில் நடக்கிறது. இது ஒரு ரயில்வே ஸ்டேஷன்.

அகரம்:—இது திண்டுக்கல்லுக்கு 6 மைலுக்கு அப்பாலுள்ளது. இங்கிருக்கின்ற முத்தாளம்மன் கோவிலில் புரட்டாசி மாதந்தோறும் ஒரு பெரிய உற்சவம் நடக்கிறது குடவனாற்றின் மேற்குக் கரையிலுள்ளது.

**தாடிக்கொம்பு**:—இவ்வூர் திண்டுக்கல்லுக்கு வடக்கே வேடசெந்தூர் ரஸ்தாவில் 6 மைல் தூரத்திலுள்ளது. இங்குள்ள சுந்தரராஜப்பெருமாள் கோவிலில், சித்திரை மாதத்தில் ஒரு பெரிய உற்சவம் நடக்கிறது. இங்கு பெருமாளின் அவதாரங்களைக்காட்டும் பல கற்சிலைகள் இருக்கின்றன. இவ்வூர் குடவனாற்றின் கீழ் கரையிலுள்ளது.

**வேடசெந்தூர்**:—இது ஒரு யூனியன் பட்டணம். இங்கு ஒரு பெரிய சந்தை கூடுகிறது. இவ்வூரின் பக்கத்தில் நல்ல புகையிலை விளைகிறது. இதில் சப்ரிஜிஸ்டரார் ஆபீஸும், டிப்டிதாசில்தார் ஆபீஸும், இன்னும் சில ஆபீஸுகளு மிருக்கின்றன. இது திண்டுக்கல்லுக்கு வடக்கே 12 மைல் தூரத்திலுள்ளது.

**கன்னிவாடி**:—இவ்வூர் திண்டுக்கல்லுக்கு மேற்கே 10 மைல் தூரத்திலுள்ளது. இவ்வூர் ஒரு பெரிய ஜமீன். இவ்வூர் வாழைப்பழத்துக்குப் பேர்போனது. இந்த ஜமீன் ஊர் இம்மதுரை ஜில்லாவிலுள்ள ஜமீன்களில் பெரியது.

**ஆத்தூர்**;—இங்குள்ள வண்டிகாளியம்மன் அதிக சக்தியுள்ள தேவதை என்று சொல்லுகிறார்கள். இக்கோவிலில் வருஷந்தோறும் ஒரு பெரிய உற்சவம் நடக்கிறது. இவ்வுற்சவத்தில் அம்மனுக்கு எருமையை பலியிடுகிறார்கள். அம்பாத்துரை, ரயில்வெஸ்டேஷனிலிருந்து ஒரு வண்டிப்பாதை இவ்வூருக்குப் போகிறது

**பலக்கனூத்து**:—இவ்வூர் பழனிக்குப்போகும் பாதையிலுள்ளது. இங்கு முசாபரிபங்களாவும் ஒரு சத்திரமும்

உண்டு. இங்கிருந்து கன்னிவாடிக்கு ஒரு வண்டிப்பாதை போகிறது.

மலைகள்:—திண்டுக்கல் பாறை, வராகமலை, சிறுமலை.

நதிகள்:—குடவனாறு, மஞ்சளாறு.

## VI. பழநித் தாலூக்கா

இத்தாலூக்காவில் மழை குறைவு. கிணற்று நீரால், சோளம், புகையிலை, கம்பு, கொள்ளு, கேழ்வரகு இவைகளைப் பயிர் செய்கிறார்கள்.

எல்லைகள்;—தெற்கே கொடைக்கானல் தாலூக்காவும், வடக்கே கோயம்புத்தூர் ஜில்லாவும், திருச்சிராப்பள்ளி ஜில்லாவும் மேற்கே கோயம்புத்தூர் ஜில்லாவும், கிழக்கே திண்டுக்கல் தாலூக்காவுமிருக்கின்றன.

பழநி:—இது ஒரு முனிஸிபல் டவுன். இவ்வூருக்கு இப்பெயர்வரக் காரணமென்ன? முன்னொரு காலத்தில் சிவபெருமான் உமாதேவி, விநாயகக்கடவுள், சுப்பிரமணியர் முதலானவர்களோடு அமர்ந்திருந்தார். அந்தச் சமயத்தில் நாரத முனிவர் ஓர் மாதுளம் பழம் கொண்டுவந்து சிவபெருமான் சந்நிதியில் வைத்தார். அக்கனியைத் தமது புதல்வர்கள் இருவருள் யாருக்குக்கொடுப்பது என்று யோசித்து உலகம் யாவையும் யார் முதலில் சுற்றிவருகின்றார்களோ அவர்களுக்கு இக்கனியைக் கொடுப்பேன் என்று சிவபெருமான் சொன்னார். உடனே சுப்பிரமணியர் மயில் வாகனத்திலேறிக்கொண்டு உலகத்தைச் சுற்றுவதற்குப் போய்விட்டார். ஆனால் விநாயகரோ தனது பெரிய வயிற்றைத்தூக்கி நடக்கக் கூடாதவராய் எழுந்து, உலகம் யாவும் உம்முள் அடக்கம்

என்று சொல்லித் தாய்தந்தையரை மூன்று தடவை வலம் வந்து நமஸ்காரம் செய்து நின்றார். உடனே சிவபிரான் மாதுளம்பழத்தை விநாயகரிடம் கொடுத்துவிட்டார். அப்பொழுது சுப்பிரமணியர் அதிக வேகமாக உலகம் யாவும் சுற்றிவிட்டுவந்து, கனியானது தனது அண்ணன் கையில் இருப்பது கண்டு, கோபங்கொண்டு தெற்குத் திசையில் வந்து ஓர் குன்றின்மேல் நின்றார். சிவபெருமானும் கோபித்துக்கொண்டுவந்த சுப்பிரமணியரைக் கூப்பிடுவதற்காகக் குன்றின் வடமேற்கு எல்லையில் தோன்றி "ஏ முருகா" நீ சிறு பிள்ளையா? சாதாரணமாகிய மாதுளம்பழம் ஒரு பழமாகுமா? வேதத்தில் சொல்லப்பட்ட ஞானப்பழம் நீ, 'அப்பா வா' என்று அருமையாக அழைத்தார். அன்று முதல் சுப்பிரமணியருக்குப் பழனியப்பன் என்றபெயரும், அவர் நின்ற குன்றின் பக்கத்தில் உண்டான ஊருக்குப் பழநி என்றும் பெயர்வந்ததென்று ஸ்தலப்புராணம் கூறுகிறது. இக்கோவில் இந்தியாவில் மிகவும் பிரசித்திபெற்று விளங்குகிறது. இக்கோவில் கந்தர்சஷ்டி, பங்குனிஉத்தரம், அக்கினிநக்ஷத்திரகழிவு இவ்விசேஷ காலங்களில் ஆயிரக்கணக்கான ஜனங்கள் இங்குவந்து சுவாமியைத் தெரிசித்து விட்டுப் போகிறார்கள். இங்கு பால் அபிஷேகம் சதா நடக்கின்றது. இப்பழனியாண்டவருக்கு அபிஷேகமாகும் பஞ்சாமிர்தம் மிகவும் ருசிகரமானது, இது ஒரு வியாபாரஸ்தலம். பழநியாண்டவர் இருக்கும் அடிவாரத்தின் மேற்குப்பக்கத்தில் வையாபுரிக்குளம் என்ற ஒருகுளம் இருக்கிறது. இவ்வூரில் தாலூக்காக் கச்சேரியும், ஆஸ்பத்திரியும், அநேக மடங்களும், முனிஸீப் கோர்ட்டும், சப் ரிஜிஸ்டராபீஸும், ஒரு முனிஸிபல் ஹைஸ்கூலும் இருக்கின்றன.

சத்திரப்பட்டி:—இவ்வூர் பழநிக்குக் கிழக்கே 10 மைல் தூரத்திலுள்ளது. இங்கு ஒரு சப்ரிஜிஸ்டராபீஸ் இருக்கிறது.

விருப்பாக்ஷி:—பழநிக்குக் கிழக்கே 12 மைல் தூரத்திலுள்ளது. இங்கு ஒரு பெரிய சந்தை கூடுகிறது. இச்சந்தை வியாழக்கிழமை தோறும் கூடுகிறது. இச்சந்தைக்குச் சுற்று பக்கங்களிலிருந்து ஆயிரக்கணக்கான ஜனங்கள் வந்து வியாபாரம் செய்து போகிறார்கள். பலாப்பழத்திற்கும் வாழைப் பழத்திற்கும் பெயர் பெற்ற இடம். இவ்விடத்தில் ஒரு போர்டு பாடசாலை இருக்கிறது.

ஒட்டன் சத்திரம்:—இவ்வூர் பழநிக்குக் கிழக்கே 17 மைல் தூரத்திலுள்ளது. இங்கு முன் ஒட்டனால் கட்டப்பட்ட சத்திரம் ஒன்று இருக்கிறது. இங்கு புகையிலைப் பயிரிடப்படுகிறது.

ஐவர்மலை:—இது பழநிக்கு மேற்கேயுள்ளது. இம்மலையில் பஞ்சபாண்டவர்கள் இருந்ததாகவும், அதனால் இதற்கு இப்பெயர் வந்ததென்றும் சொல்லுகிறார்கள். இம்மலையின் உச்சியில் ஒரு விநாயகர் கோவில் உண்டு. பஞ்சபாண்டவர்களுடைய கற்சிலைகளும், ஒரு பொய்கையும் இருக்கின்றன.

கீரனூர்:—பழநிக்கு வடக்கே 10 மைல் தூரத்திலுள்ளது. இவ்வூரில் முகம்மதியர்கள் அதிகம். இங்கு முன் கட்டிய பழைய கோட்டை ஒன்று உண்டு. இங்கு வெற்றிலை வியாபாரம் அதிகம்.

கலையம்புத்தூர், நெய்க்காரப்பட்டி, குமாரபாளையம், மஞ்சி நாயக்கன்பட்டி, கணக்கம்பட்டி, இவ்வூர்கள் இத்தாலூக்காவிலுள்ள மற்ற முக்கிய ஊர்கள்.

முக்கிய ஜமீன்கள்:—இடையன்கோட்டை, மாம்பாறை, ஆயக்குடி முதலியன.

மலைகள்:—பழநிமலை.

நதிகள்:—ஷண்முக நதி, வராகநதி.

## VII. நிலக்கோட்டைத் தாலூக்கா

இந்தத் தாலூக்கா இம்மதுரை ஜில்லாவின் மத்தியி லிருக்கிறது. இத்தாலூக்கா நீர்வசதியுள்ளது. இத்தாலூக் காவிலுள்ள அணைப்பட்டி என்னுமிடத்திற்கருகில் வைகை நதிக்குக் குறுக்கே கட்டப்பட்ட அணையிலிருந்து, மதுரை மேலூர் இத்தாலூக்காக்களுக்கு பெரியாற்றுக் கால்வாய்க ளின் மூலமாய்த் தண்ணீரைப் பிரித்துவிடுகிறார்கள்.

எல்லைகள்:—மேற்கே பெரியகுளம் தாலூக்காவும், கிழக்கே மேலூர், மதுரைத் தாலூக்காக்களும், வடக்கே திண்டுக்கல் தாலூக்காவும், தெற்கே திருமங்கலம் தாலூக் காவும், மதுரைத்தாலூக்காவு மிருக்கின்றன.

நிலக்கோட்டை:—இது இத்தாலூக்காவின் தலை நகர், முன் காலத்தில் இவ்வூரைச்சுற்றி மண்ணினால் கட்டப்பட்ட கோட்டைஇருந்ததாகவும், அதனால் இவ்வூருக்கு இப் பெயர் வந்ததென்றும் சொல்லுகிறார்கள். அம்மையநாயக்க னூரிலிருந்து .பெரியகுளத்துக்குப் போகும் பாதையில் 5 மைல் தூரத்தில் இவ்வூர் இருக்கிறது; இங்கு தாலூக்கா போர்டு கச்சேரியும் இன்னும் தாலூக்காவிற்கு ஏற்பட்ட மற்ற கச்சேரிகளும் உண்டு.

அம்மையநாயக்கனூர்:-இப்பட்டணம்இப்பெயர்கொண்ட ஜமீன் பட்டணம். இது ஒரு ரயில்வேஸ்டேஷன். இந்த

ரயில்வேஸ்டேஷனுக்கு இப்பொழுது கொடைக்கானல் ரோடு என்று பெயர் வைத்திருக்கிறார்கள். இந்த ஸ்டேஷனில் இறங்கித்தான் நிலக்கோட்டை, பெரிய குளம், கொடைக்கானல், இவ்விடங்களுக்குப் போகிறார்கள்.

சோழவந்தான்:—இது ஒரு ரயில்வே ஸ்டேஷன். வைகை நதியின் வடகரையிலுள்ளது. இவ்வூர் மதுரைக்கு 12 மைல் தூரத்திலுள்ளது. இது மிகவும் செழிப்பான ஊர். இங்கு தென்னந்தோப்புகள் அதிகமாய் இருக்கின்றன. ராணி மங்கம்மாளால் கட்டப்பட்ட சத்திரம் ஒன்று இருக்கிறது. இதில் ஒரு போர்டு ஹைஸ்கூல் இருக்கிறது. முன் காலத்தில் இதற்குச் சோழாந்த சதுர்வேத மங்கலம் எனப் பெயர் வழங்கலாயிற்று.

திருவேடகம்:—இவ்வூரும் வைகை நதியின் வடகரையில்தானிருக்கிறது. முன்னொரு காலத்தில் மதுரையை ஆண்ட கூன்பாண்டியன் என்பவருக்கு தீராத நோய்கண்டு, அந்நோய் விலகுவதற்குத் திருஞான சம்பந்தரிடம் சென்றார். திருஞான சம்பந்தர் இவ்வூரில் இருக்கும்போது, கூன் பாண்டியன் வந்து வணங்கி நின்றான். அப்பொழுது திருஞான சம்பந்தரால் அத்தீராத நோய் விலகினதென்றும், கூன் நிமிர்ந்ததென்றும் பிறகு திருஞானசம்பந்தருக்கும் சமணர்களுக்கும் சில விஷயமாக வாது உண்டாகும்போது, ஞானசம்பந்தர் வைகை நதியில்போட்ட ஏடு திரும்பி கரை ஏறிற்றும். இவ்விஷயத்தால் இவ்வூருக்கு இப் பெயர் வந்ததென்று சொல்லுகிறார்கள். இவ்வூரில் சுந்தர பாண்டியர்கட்டிய கோவிலும், ஞான சம்பந்தர் மடமும் இருக்கின்றன.

வத்தலக்குண்டு:— இவ்வூரில் ஒரு போர்டு ஹைஸ்கூல் இருக்கிறது. நிலக்கோட்டையிலிருந்து இவ்வூர் 7 மைல் தூரத்தில் இருக்கிறது. இங்கு சம்பாநெல் விசேஷமாய் விளைகிறது. இங்கு வாரத்தில் ஒரு சந்தை கூடுகிறது.


நதிகள்:—வைகைநதி, மஞ்சள்நதி.

## VIII. கோடைக்கானல் தாலூக்கா

நாம் வசிக்கும் மதுரை ஜில்லாவில் மலையடர்ந்த தாலூக்கா இதுவே. இந்தத்தாலூக்கா எந்த மலைக்கு எந்தப் பக்கத்திலிருக்கிறதென்று படத்தைப் பார்த்துச் சொல்லுங்கள்? இங்கு மழை அதிகமாய் பெய்கிறது. இவ்விடத்தில் பாம்பாறு உற்பத்தியாகிறது. இஜ்ஜில்லாவிலுள்ள தாலூக்காக்களில் இதுவே சிறியது.

எல்லைகள்:—வடக்கே பழனித்தாலூக்கா, தெற்கே பெரியகுளம் தாலூகா, மேற்கே திருவாங்கூர் ராஜ்ஜியமும், கோயம்புத்தூர் ஜில்லாவும், கிழக்கே திண்டுக்கல் தாலூக்காவும் எல்லைகளாயிருக்கின்றன.

கோடைக்கானல்:— இப்பட்டணம் இப்பெயர்கொண்ட மலையின் மேலுள்ளது. இது இத்தாலூக்காவின் தலைநகர் இது ஒரு முனிஸிபல் பட்டணம். இங்கு மழை அதிகம். இந்த ஜில்லாவில் கோடை காலத்தில் குளிர்ச்சிக்காகத் தங்குமிடம் இதுவே. இஜ்ஜில்லாவின் கலெக்டரும், மற்ற உத்தியோகஸ்தர்களும், கனவான்களும் கோடைகாலத்தில் தேக சௌகரியத்திற்காக இங்கு போகிறார்கள். இங்கு ஆங்கிலேயர்களுக்கு வேண்டிய காய்கறிகள், ஏலக்காய், காப்பிக்கொட்டை முதலியவைகள் உண்டாகின்றன. இவ்விடத்



கொடைக்கானல் மலை

தில் சப்ரிஜிஸ்டர் ஆபீஸும், தாலூக்காக் கச்சேரியும், இன்னும் மற்ற கச்சேரிகளும், நக்ஷத்திரச் சாலையும், ப்ரைன்ட் பார்க்குமிருக்கின்றன. இங்குள்ள நீர் அருவிகளும், மலைக் காட்சிகளும், பங்களாக்களும் பார்க்கத்தக்க காட்சிகளாயிருக்கின்றன. இதனடிவாரத்தில் கிருஷ்ணப்ப நாயக்கன் தோப்பு இருக்கிறது.

---

## 27. ஜில்லா சரித்திரம்

### நாயக்கர்கள்

**விஸ்வநாதநாயக்கர்:**—பாண்டியநாட்டை ஆண்ட நாயக்கர்களில் முதலாவதாக ஆண்டவர் விஸ்வநாத நாயக்கரே. இவருடைய காலத்தில் அரசியல் நிர்வாகம் மிக எளிதில் நடைபெற்றது. நாட்டில் தண்ணீர் கஷ்டத்தைப்போக்கி

வைகை நதியில் பேரணை சிற்றணை களை கட்டிமுடித்தார். பிரயாணிகளுக்கு ஏற்பட்டிருந்த திருடர் பயத்தை போக்கினர். யாத்திரை, செய்வோர்களுக்கு வழிகளில் அன்னச் சத்திரங்கள் கட்டுவித்தார். இவர் திருச்சிராப்பள்ளியை தனக்கு தலைநகராக வைத்துக்கொண்டார். இவர்காலத்தில் தான் இவருடைய பிரதான மந்திரியாகிய அரியநாயகம் முதலியாரின் முயற்சியால் மதுரை மீனாக்ஷியம்மன் கோவிலிலுள்ள ஆயிரக்கால் மண்டபம் கட்டப்பட்டது. இன்னவருடைய புத்திக் கூர்மையால் தான் ராஜாங்கம் எளிதில் நடைபெறவும், பிரஜைகள் ஒற்றுமையுடனும் சமாதானத்தோடும் வாழ்ந்துவரவும் ஏற்பட்டது. விஸ்வநாத நாயக்கர் மதுரையிலுள்ள பழைய கோட்டைகளை இடித்து புதுப்பிக்கும்படி தனது பிரதான மந்திரியிடம் தெரிவிக்க அவ்விதமே செய்து முடித்தார். இவருக்குப் பின் அவருடைய மகன் குமார கிருஷ்ணப்பநாயக்கர் பட்டத்திற்கு வந்தார்.

குமாரகிருஷ்ணப்ப நாயக்கர்:—இவர் பட்டத்திற்கு வந்ததும் நாட்டின் விவசாய விர்த்திக்காக அநேக கால்வாய்களை வெட்டி சம்சாரிகளுக்குவேண்டிய உதவி புரிந்து வந்தார் இவரோடு யுத்தத்திறகு வந்த தும்பாச்சி என்ற பாளையக்காரனையும் அவனுக்கு உதவிசெய்யவந்த கண்டிராஜனையும் யுத்தத்தில் தோற்கடித்து கண்டிராஜனுக்கு சொந்தமான இலங்கைத் தீவையும் தன்சுவாதீனத்தில் கொண்டுவந்தார். இவர் பத்து வருஷம் அரசாட்சிசெய்து இறந்தார். அதன்பிறகு இவருடைய பிள்ளைகள் 12 வருஷம் அரசாட்சிசெய்தார்கள். அதன் பிறகு முத்துகிருஷ்ணப்ப நாயக்கர் பட்டம் பெற்றார்.

முத்துகிருஷ்ணப்ப நாயக்கர்:—இவர் பட்டத்திற்கு வந்ததும் சேதுபதியை தன்னோடு சேர்த்துக்கொண்டார். சேது

பதியும் நன்றியுள்ளவராய் இருந்துவந்தார். இவருக்கு முத்து வீரப்ப நாயக்கர்: திருமலை நாயக்கர், குமாரமுத்து நாயக்கர், என்ற மூன்று குமாரர்கள் உண்டு.

முத்துவீரப்ப நாயக்கர்:—இவருடைய காலத்தில்தான் முகமதியர்கள் நம் நாட்டை படை எடுத்தது. அப்போது பாளையக்காரர் ஒற்றுமையாக நாயக்கருக்கு உதவி செய்ய முகம்மதியர்களால் ஒன்றும் செய்யமுடியவில்லை. இவர் பதினைந்து வருஷம் பாளையக்காரர் உதவியைக்கொண்டு அரசாட்சி செய்துவந்தார். இவருக்கும் திருச்சினப்பள்ளியே தலைநகராயிருந்தது.


## திருமலை நாயக்கர்

இவர் மதுரையை தலைநகராகக்கொண்ட பாண்டிய நாட்டை 36 வருஷம் அரசாட்சி செய்து வந்திருக்கிறார். இவருடைய தகப்பனார் பெயர் முத்துகிருஷ்ணப்ப நாயக்கர் இவர் மதுரையை அரசுசெய்துவந்த நாயக்கர்களில் பத்தாவதாக கி. பி. 1623 வருஷம் பட்டத்திற்கு வந்தவர். நாயக்கர்களில் பல பிரிவாயுள்ள பலிஜா என்ற வகுப்பைச் சேர்ந்தவர். இவருடைய பெயரைத் தெரியாதார் நமது தென் தேசத்தில் மிகச்சிலரே. இவர் மதுரையிலும் மற்றுமுள்ள பெரிய ஸ்தலங்களிலும் பல கட்டிடங்களை கட்டி வைத்திருக்கிறார். இவருடைய தகப்பனார் இறந்தபிறகு இவரின் மூத்த சகோதரரான முத்துவீரப்ப நாயக்கர் 15 வருஷம் அரசாண்டு இறந்தார். அதன்பின்பே திருமலை நாயக்கர் பட்டத்திற்கு வந்தார். இன்னவரைச்சேர்ந்த குடும்பங்கள் மதுரை ஜில்லாவில் இன்னும் இருந்து வருகிறார்கள்.

இவருடைய தாய் பாஷை தெலுங்காக இருந்தபோதி லும் தமிழ் பாஷையில் மிகுந்த பாண்டித்தியம் பெற்றவர். அக்காலத்து புலவர்களில் சிறந்தவர்களான குமார குருபரசாமி யும், பிள்ளைப்பெருமாளும் இவருடைய சமஸ்தான வித்வான்க ளாய் இருந்தார்கள்.

இவருடைய உருவச்சிலை மதுரை புதுமண்டபம் மீனாக்ஷி யம்மன்கோவில், ஸ்ரீவில்லிபுத்தூர், அழகர்கோவில் முதலிய இடங்களில் வைக்கப்பட்டிருக்கிறது. அதைப்பார்த்தமாத் திரத்தில் இவர் திடசரீரமுள்ளவரென்றும் ராஜலக்ஷண முடையவரென்பதும் விளங்கும். இவர் பட்டத்திற்கு வந் ததும் திருச்சியே தலைநகராய் இருந்தது. அவ்விதம் இருந்து வரும் சமயம் ஒருநாள் மதுரைக்குப் பிரயாணப்பட்டு திண் டுக்கல்லுக்கு சமீபமாய் வந்துகொண்டிருந்தார். அப்போது அவருக்கு இயற்கையாய் ஏற்பட்ட காசநோய் அவரை உபத் திரவிக்க திண்டுக்கல்லில் தங்கிவிட்டார். இவர் விஷ்ணு மதத்தைச் சேர்ந்தவராயிருந்தும் சிவமதக் கடவுளாகிய மீனாக்ஷியம்மனிடத்தும் சோமசுந்தரக்கடவுளிடத்தும் மிகுந்த பக்தி உடையவர். அவர்களின் கடாக்ஷத்தால் அவர் நோய் நீங்கி சுகமுற்றார். அதன்பிறகே மதுரையை தலைநகராகக் கொண்டு அரிய பெரிய கட்டிடங்கள் கட்டிமுடித்தார். அது முதல் மதுரையம்பதியின் சிறப்பு பெருமைபெற்று விளங்கி யது. இவரால் கட்டப்பட்ட கட்டிடங்கள் பின் வரு பவை:—மஹால், புதுமண்டபம், அதையொட்டிய ராயகோபு ரம், தெப்பக்குளம் முதலியன.

மஹால்:—நாயக்கர் கட்டிய கட்டிடங்களில் முதன்மை யானது இதுவே. இப்போதிருக்கும் கட்டிடத்தை சேர்ந்த




திருமலைநாயக்கர் மஹால்

கட்டிடங்கள் சமீபத்திலேயே அழிவடைந்ததாக சரித்திரங்கள் கூறுகின்றன. திருமலைநாயக்கரின் பேரனாகிய சொக்கநாத நாயக்கர் திருச்சியில் அரண்மனை கட்ட பொருள் போதாமல் மேற்படி கட்டிடங்களை இடித்து அதிலுள்ள சாமான்களைக் கொண்டு திருச்சியில் அரண்மனை கட்டிமுடித்தான் என்பது சரித்திர வரலாறு. மீதமான கட்டிடங்களே இப்போது திருமலைநாயக்கர் மஹால் என அழைக்கப்படுகிறது இது மதுரையின் தென்கிழக்கே இருக்கிறது. நிற்க இப்போதிருக்கும மஹாலில் விசாலமான முற்றங்களும் அதைச் சுற்றி கட்டிடங்களும் பெரிய அரங்கமேடைகளும் ஆயுதச் சாலைகள் குளம், ராஜசிறைச்சாலைகளும் ஆகிய கட்டிடங்களும் இருக்கின்றன. இக்கட்டிடங்கள் எல்லாம் உத்திரமின்றி செங்கல் சுண்ணாம்பாலும் கட்டி முடிக்கப்பட்டது. இதிலுள்ள ஒவ்வொரு தூண்களும் பிரமாண்டமானதும் வழுவழுப்பாயும் உயரமாயும் இருக்கும். சுவர்களும் மேல்

மாடங்களும் மாடங்களிலுள்ள வில்வளைவுகளும் அவ்வமயம் உள்ள சிற்பிகளின் திறமையை நன்கு விளக்குகிறது.

புதுமண்டபம்:—இது மதுரை மீனாக்ஷியம்மன் கோவிலின் கிழக்கே இருக்கிறது. இது திருமலைநாயக்கர் காலத்தில் புதிதாகக் கட்டப்பட்டதால் புதுமண்டபம் என்று பெயர் வந்தது. வசந்தமண்டபமென்றும் ஓர் காரணப் பெயரும் உண்டு. இதில் பிரமாண்டமானதும் பல பதுமைகள் சித்திரிக்கப்பட்டதுமான தூண்களும் இருக்கிறது. இதில் நாயக்கருடையவும் அன்னவர் பத்தினிமார்களுடையவும் உருவச் சிலைகள் பல வர்ணங்களிட்டு வைக்கப்பட்டிருக்கிறது.

இராயகோபுரம்:—இதுபுதுமண்டபத்திற்கு கிழக்கேயுள்ளது. முழுதும் கட்டிமுடிக்காத ஒரு கோபுரம் விஜயநகரத்து சக்கரவர்த்தியின் ஞாபகத்திற்காக கட்டப்பட்டது. திருமலைநாயக்கரின் கோரிக்கைப்படி முடிவு பெறாததால் ஒருவன் தனக்கு முடியாத காரியத்தை செய்ய பிரயாசைப்பட்டால் அவனைப் பார்த்து இராயகோபுரத்திற்கு அடிப்போட்டாற் போல என்ற பழமொழி சொல்லுவார்கள்.



மாரியம்மன் தெப்பக்குளம்

தெப்பக்குளம்:—இது மதுரை நகருக்கு கிழக்கே 2 மைல் தூரத்திலுள்ள ஒரு குளம். இதுமாரியம்மன் கோவிலுக்குச் சமீபமாயும் வண்டியூர் என்ற கிரா

மத்திற்குச் சமீபமாயும் இருப்பதால் மாரியம்மன் தெப்பக் குளம் அல்லது வண்டியூர் தெப்பக்குளம் என்று சொல்லு வார்கள். இதுவே நமது தென்தேசத்திலுள்ள குளங்களில் பெரியது. இது 950 அடி நீளமும் அதைப்போன்ற அகல மும்உள்ளது. மஹால் கட்டுவதற்காக செங்கற்களுக்காக பள்ளந்தோண்டப்பட்டது என்றும் அதன் பிறகு மிகப் பெரிதான பள்ளமாயிருந்ததாலும் தெப்பக்குளமாக கட்டப் பட்டது என்று சொல்லப்படுகிறது.

இதில் தைமீ பூச நக்ஷத்திரத்தன்று மீனாக்ஷியம்மனுக் கும் சோக்கநாதருக்கும் திருவிழா நடக்கும். பூசநக்ஷத்திரம் திருமலைநாயக்கருடைய ஜன்ம நக்ஷத்திரமானபடியால் அந்த நக்ஷத்திரத்தில் மேற்படி திருவிழா நடைபெறுகிறது.

மதுரையைப் பொருத்த அளவில் திருமலைநாயக்கரால் கட்டப்பட்ட கட்டிடங்கள் இதுவே. தவிர ஸ்ரீவில்லிபுத்தூர், திருப்பரங்குன்றம், அழகர்கோவில், ஸ்ரீரங்கம் முதலிய ஸ்த லங்களில் கணக்கில்லா அரிய பெரிய கட்டிடங்களையும் கட்டி முடித்திருக்கிறார். இனி நாயக்கருடைய காலத்தில் ஏற்பட்ட யுத்தத்தைப்பற்றி கவனிப்போம்.

சாதாரணமாக சுயேச்சை வாழ்வே சுகவாழ்வு என்ப தற்கிணங்க ஒருவன் மற்றொருவனுக்கு அடிமையாக நடப் பதைக்காட்டிலும் சுயேச்சையாகவாழவே பிரியப்படுவான். அவ்விதமே நமது நாயக்கரும் தம் முன்னோர்களைப்போல் சுயேச்சையாக இருக்க எண்ணி விஜயநகர சக்கரவர்த்திக்கு உட்படாமலிருந்தார். அதை அறிந்த விஜயநகரத்தார் அவ் வமயம் ஏற்பட்டிருந்த பலக்குறைவினால் ஒன்றும்செய்யாது

இருந்துவிட்டனர்கள். சிறிதுகாலத்திற்கு பின்நாயக்கரிடம் பகைமைகொண்ட மைசூர் அரசரை, சக்கரவர்த்தி தனக்கு உதவிக்கு சேர்த்துக்கொண்டு நாயக்கரை தாக்கினார்கள். நாயக்கரும் தனக்காக செஞ்சி அரசனை தம்மோடு சேர்த்துக் கொண்டு யுத்தத்திற்குச் சென்றார். இருவருக்கும் யுத்தம் வெகு காலம் நடந்தது. நாயக்கருடைய சேனைத்தலைவர்க ளின் சாமர்த்தியத்தால் எதிரிகள் தோற்கடிக்கப்பட்டார்கள்.

அதன் பிறகு சக்கரவர்த்தி பலமடைந்து தென்னாட்டி லுள்ள பல சிற்றரசர்களை தண்டிக்க எண்ணி முதலாவது செஞ்சி கோட்டையை முற்றுகை போட்டார். இதை அறிந்த நாயக்கர், செஞ்சி அரசனுக்கு உதவிசெய்ய தம் சேனையோடு செல்ல அதில் சக்கரவர்த்தி ஜெயமடைந்து விட்டார். அப் போது அபஜெயமடைந்த நாயக்கர், கோல்கோண்டாசுல்தானை உதவிக்கு அழைத்துக்கொண்டு சக்கரவர்த்தியை எதிர்த்தார். அதில் ஜெயம் ஒருவருக்கும் ஏற்படவில்லை. நிற்க அதன் பிறகு கோல்கோண்டா சுல்தானே நாயக்கருக்கு எதிரியாக நாயக்கரோடு யுத்தத்திற்கு வர இருவருக்கும் யுத்தம் நடந் தது. அப்போது பீஜப்பூர் சுல்தான், கோல்கோண்டா சுல்தா னோடு சேர்ந்து கொள்ளவும் நாயக்கர் சேனைகள் பின் வாங்கி யது. அது சமயம் விஜயநகர சக்கரவர்த்தி பழைய விரோ தத்தைவிட்டு நாயக்கருக்கு உதவி புரிந்தார். எவ்வளவு உதவி புரிந்தும் ஜெயம் உண்டாகவில்லை. கடைசியாக பீஜப் பூர் சுல்தானுக்கு ஒவ்வொரு வருஷமும் கப்பம் கட்டுவதாக ஒப்புக்கொண்டார். அதுசமயம் சக்கரவர்த்தி உதவி இல்லா திருக்குமானால் மகம்மதியர்கள் மதுரையை பாழாக்கி இருப் பார்கள். கப்பம் கட்டுவதாக ஒப்புக்கொண்ட பிறகே மகமதியர் கள் சமாதானத்தோடு சென்றார்கள்.

அதன் பின் நாயக்கருக்கும். மைசூர் மன்னருக்கும் ஏற்பட்ட அபிப்பிராய பேதத்தால் இருவருக்கும் யுத்தம் நடந்தது. அப்போது நாயக்கர் சேதுபதியின் உதவியைக்கொண்டு மைசூர் அரசனின் சேனைகளை விரட்டி அடித்தார். சிறிது காலத்திற்கு பிறகு திருமலைநாயக்கருடைய தம்பியாகிய குமார முத்து நாயக்கர் ஒரு பெரிய சேனையோடு சென்று அவ்வரசனுடைய சேனைகளையும் சிதற அடித்து அரசனையும் அவமானப்படுத்தி திரும்பு முன் திருமலைநாயக்கரின் ஆட்சி முடிவடைந்து பரலோக பிராப்தியடைந்தார். ஆகவே முப்பத்து ஆறுவருஷம் அரசாட்சி செய்துள்ளார். இவர் இறக்கும் சமயம் இவருக்கு வயது 75. திருமலைநாயக்கருக்குப் பின் அவருடைய குமாரர் முத்துஅளகாத்திரி நாயக்கர் அரசரானார். சொற்பகாலம் அரசாண்டார். அவர் திடீரென்று இறந்துவிட அவர்மகன் சோக்கநாத நாயக்கர் மஹாராஷ்டிரரை தம்மோடு சேர்த்துக்கொண்டு திருமலை நாயக்கர் கட்டிய கட்டிடங்களை இடித்து திருச்சியில் தனக்கு ஓர் அரண்மனைகட்டிக்கொண்டு வசித்தார். சிறிது காலத்திற்குப் பின் இவர் இறந்துபோக இவரின் மனைவியாகிய மங்கம்மாள் அக்காலத்து வழக்கப்படி உடன்கட்டை ஏறவில்லை. அதன் பின்பு இவருடைய மகன் ராமகிருஷ்ணமுத்துவீரப்ப நாயக்கர் நாட்டை ஆண்டுவந்தார். இன்னவர் பட்டத்திற்கு வந்ததும் தகப்பனால் இழக்கப்பட்ட கோட்டையை விரோதிகளிடமிருந்து கைப்பற்றினார். இவரும் திடீரென்று இறந்துவிட இவருடைய மனைவியும் ஓர் ஆண் குழந்தையை பெற்றுவிட இறந்து விட்டாள். அக்குழந்தைதான் விஜயரங்கசொக்கநாத நாயக்கர் இவருக்குத் தக்க வயது வரும் வரை அவருடைய பாட்டியும் சொக்கநாத

நாயக்கருடைய மனைவியாகிய மங்கம்மாள் 16 வருஷம் அரசாட்சி செய்தார்கள்.

## மங்கம்மாள்

### கி. பி. 1688—1704

நீர்வளமும் நிலவளமும் நன்கமையப்பெற்ற மதுரையம்பதியையும் அதைச்சேர்ந்த வளநாட்டையும் ஆண்டுவந்த பெண்ணரசிகள் அநேகருளர். அவர்களில் பெண்களுக்குரிய குணங்கள் யாவும் ஒருங்கே அமையப்பெற்றும் அரசாட்சியை நீதியுடன் செலுத்தியும் வந்தவர்களுள் அரசி மங்கம்மாளும் ஒருவராவர். இன்னவர் திருமலை நாயக்கரின் பேரனாகிய சொக்கநாத நாயக்கரின் மனைவியார்.

ராணி மங்கம்மாளின் குமாரனாகிய ரங்ககிருஷ்ணமுத்து வீரப்ப நாயக்கர் சிறிதுகாலம் நாட்டை ஆண்டு உயிர் துறக்கவே அவருக்குப் பின் ஆட்சிசெலுத்துவதற்கு பருவமடைந்த குழந்தை இல்லை. அப்பொழுது அவர் மனைவியார் முத்தம்மாள் கெர்ப்பத்தோடிருந்தாள். ஆகையால் அரசி மங்கம்மாளே ஆட்சிசெய்யவேண்டியதாயிற்று. இவர் அரசாட்சி ஏற்றுக்கொண்ட அளவில் பேரனும் பிறந்தான். அவனுக்கு விஜயரங்க சோக்கநாத நாயக்கர் என்றுபெயருமிட்டனர். ஆகவே தன் பேரனுக்காக 16 வருடம் நாட்டை ஆண்டுவந்தார்.

இவர் ராஜ்யத்தை ஏற்றுக்கொண்ட நாள் முதல் இதற்கு முன் ஆண்ட நாயக்க மன்னர்களால் கெட்டழிந்த நாடுகளை யெல்லாம் சீர்திருத்தம் செய்ய ஆரம்பித்தனர்.

காடாய்க்கிடந்த இடமெல்லாம் தக்கபடி திருத்தி ஜனங்கள் சுகத்துடன் செல்லத்தகுந்த ரஸ்தாக்களை உண்டு பண்ணி அதன் இருபக்கங்களிலும் நிழலைத்தரத்தக்க மரங்களையும் உண்டுபண்ணினர். பிரயாணிகள் இருட்டிய இடங்க

ளில் தங்குவதற்கென ஆங்காங்கு சத்திரங்களும், பசிப் பிணியை நீக்க சத்திரங்களில் அன்னதானமும் செய்து வந்தனர். இப்பொழுதும் மதுரைக்கு நாலா பக்கமும் இருக்கும் மங்கம்மாள சாலைகளே அன்னவரின் ஞாபகத் திற்குத் தக்கசான்றாக இருக்கின்றன. இப்பவும் இவ ருடைய ஞாபகார்த்தமாக மதுரையில் ரயில்வே ஜங்ஷனுக் குப் பக்கத்திலிருக்கும் மங்கம்மாள் என்னும் பெயரை யுடைய சத்திரமும், அந்திக்கடைப் பொட்டலுக்கு வடக் குப் பக்கம் மங்கம்மாள் மத்திய மார்க்கட்டும் அதிலுள்ள உன்னதமான சட்டிடங்களும் தமுக்கம்கலெக்டர் ஆபீஸும் தெற்குச் சித்திரைவீதி பழைய கலெக்டர் ஆபீஸும் இவ் வம்மையின் அரண்மனை என்றுசொல்லப்படுகிறது. இன்னும் இவ்வூர் ஆலயத்தில் பொற்றாமரைக்குளத்தின் மேலக்கரை யின் மத்தியில் அமைந்திருக்கும் தீர்த்தவாரி மண்டபத்தில் இவர் உருவச் சிலையும் வரையப்பட்டிருக்கிறது.

நிற்க ராணியின் காலத்தில்தான் நாயக்க நாடு நல்ல நிலைமையிலிருந்தது. இதை நோக்குமளவில் நம்மரசியார் தன் ஆட்சியில் கொஞ்சமும் கஷ்டத்துடன் இருந்தார் என்று சொல்வதற்கில்லை.

இவ்வாறிருக்க மேல் நாட்டுப் பாதிரிகள் நம்நாட்டிற்கு வந்து கிரிஸ்தவமதத்தைப் பரவச்செய்தனர். இதை அறிந்த கிழவன் சேதுபதி, பாதிரிக்குத் தூக்குத் தண்டனையும் விதித்தார். ஐயோ! பாவம் இன்னதென்று அறியாத நம் நாட்டில் இவ்விதம் நம்மைச்சேர்ந்த ஒருவர் செய்ததை சிந் திக்குங்கால் மனம் துடிதுடிக்கவில்லையா, நம்மரசியாரின் தன்மையைப் பாருங்கள். இன்னவரிடத்தில் ஒரு பாதிரி வந்து அரசியின் மந்திரியாகிய தளவாயின் மூலமாக கிரிஸ்த வர்களைத் துன்புறுத்தாமலிருக்கும்படி வேண்ட, அவரும்

அவ்வாறே ஒப்புக்கொண்டனர். இப்பொழுதோ நம்மவர்கள் சிலரின் செயற்கையால் ஜாதி மதம் என்னும் வருணாச்சிரம அதர்மக்கொள்கைகளை மேற்போட்டுக்கொண்டு திரிகின்றார்கள். நம் நாடு கூடிய சீக்கிரம் யாதொரு வித்தியாசமும் இல்லாமல் ஒன்றுபட்டுமிருப்பதற்கு தற்கால துரைத்தனத்தார் எடுத்துக்கொண்டிருக்கும் ஊக்கம் அதிகமும் பாராட்டத் தக்கது.

நம்மரசியாரின் பேரனுக்கு பருவம் வரவே ராஜ்ஜியத்தை அவனிடம் ஒப்படைத்து விட்டு மதுரையிலுள்ள தன்னுடைய அரண்மனையில் வசித்துவந்தார்.

## பாண்டியர்கள்

பாண்டியர்கள் நமது நாட்டை கிறிஸ்துவுக்குப் பின் **200** வருஷங்கள்வரை அரசுசெய்து வந்திருக்கிறார்கள். இன்னவர்களால் தமிழ்ச் சங்கங்கள் ஏற்பட்டது. கடைசியாகஉக்கிரப் பெருவழுதிப் பாண்டியன் காலத்தில் ஓர் சங்கம் ஸ்தாபிக்கப்பட்டது. அப்பொழுது தான் சாத்தனார், நக்கீரர் முதலிய புலவர்கள் இருந்தனர். இவர்கள் தமிழில் மிகுந்த தேர்ச்சியடைந்தவர்கள், மேற்கூறிய காலத்தில் 40 தமிழ் புலவர்கள் இருந்திருக்கின்றனர். முதலாவதாக ஏற்படுத்தப்பட்ட சங்கமானது தண்ணீரால் அழிவுற்றதாக சொல்லப்படுகிறது.

இவர்களுடையகாலத்தில் நம்நாட்டினர் கல்வி பயின்று அறிவிற் சிறந்தவர்களாயும், நாகரீகமுள்ளவர்களாயும் கைத்தொழில் வியாபாரம் விவசாயம் முதலியவைகளில் சிறந்தவர்களாயும் இருந்தார்கள்.

இதற்குள் நமது நாடு பல்லவர்களுடைய அரசாட்சிக்குள் வந்தது. இவர்களுக்கு தலைநகர் வங்கி. இது கோதாவரி

நதிக்கரையில் இருக்கிறது. இவர்கள் பாண்டியர்களை யுத்தத்தில் ஜெயித்து அவர்களை வருடந்தோறும் தனக்கு கப்பம் கட்டும்படி செய்தார்கள். இவர்களைச் சேர்ந்தவர்கள் வன்னி, படையாச்சி முதலியவர்களாம். இவர்கள் நமது நாட்டை 700 வருஷங்கள் அரசாட்சிசெய்து குடிகளை வியாபாரம் கைத்தொழில் முதலியவைகளில் முன்னேற்ற மடையச் செய்திருக்கிறார்கள்.

இவர்களுக்குப்பின் சாலுக்கியர் என்பவர் இவர்களை ஜெயித்து இவர்கள் வசித்துவந்த இடத்தைவிட்டு விரட்டி விட்டார்கள். அதன்பின் பல்லவர்களுக்கும், பாண்டியர்களுக்கும் மதவிஷயமாய் சண்டை ஏற்பட்டு, பாண்டியர்கள் ஜெயித்தார்கள்.

பின்பு சோழர்கள் பாண்டியர்கள் மீது படை எடுத்து வென்று 300 வருஷங்கள் அரசாட்சி செய்து வந்தார்கள். சோழ ராஜாக்களில் முக்கியமானவர் இராஜ இராஜேசுவர சோழன் பராந்தகன் என்பவன். சோழ பாண்டியரென்பது சோழ நாட்டையும் பாண்டிய நாட்டையும் சேர்த்து அரசாட்சிசெய்து வந்ததால் ஏற்பட்டது. பின்பு மாறவர்ம சுந்தர பாண்டியன் சோழபாண்டியரை வென்று நமது நாட்டை சுயேச்சையாய் ஆண்டு வந்தார். அதன்பிறகு வந்த ஜடவர்ம சுந்தரபாண்டியர் இலங்கையை தன் வசப்படுத்திக்கொண்டு நமது நாட்டையும் இலங்கையையும் சேர்த்து சுயேச்சையாக அரசுசெய்து வந்தார்.

இச்சமயம் டெல்லி அரசனை மாலிக்காபர் தென்தேசத்திலுள்ள சிற்றரசர்களை வென்று பொருட்களை கொள்ளையடித்து தன்னுடைய முகம்மதிய மதத்தில் சேரும்படி கட்டாயப்படுத்தினர். அப்போது ராஜசிம்ம பாண்டியர் அரச

ராயிருந்தார். இவர் மேற்படி காபருக்கு பயந்துகொண்டு நாட்டைவிட்டு ஓடிவிட்டார். அதனுல் முசம்மதியர்கள் எளிதில் நம்நாட்டை கைப்பற்றினுர்கள். இவர்கள் சுமார் ஐம்பது வருஷம் அரசாட்சி செய்துவந்தார்கள்.

## மீனுக்ஷியம்மாள்

இவ்வம்மையாரின் அரசாட்சி 5 வருஷங்கள். இவள் பங்காரு திருமலையை வளர்ப்பு பிள்ளை (ஸ்வீகாரம்) யாக ஏற்படுத்திக்கொண்டாள். அப்பையனுடைய தந்தை தன் பிள்ளைக்கு பதிலாக தானே அரசாட்சி செய்யவேண்டுமென்முன். அதற்கு சம்மதியாத மீனுக்ஷியம்மாள் கர்னுடக நவாப் இடம் தெரியப்படுத்தினுள். இருவருக்கும் நியாயம் விளங்கும்படி தன் தள்கர்த்தனுகிய சந்தா சாகிப்பையும் தன் மகனையும் அனுப்பினுன். நவாப்பினுடைய மகன் பங்காரு திருமலையையே அரசாளும்படி நியாயம் விளங்கிவிட்டு நாட்டை பாது காக்கும்படி சந்தாசாகிப்பையும் நிறுத்திவிட்டு சென்றுன். உடனே மீனுக்ஷியம்மாள் பங்காரு திருமலையை மோசம் செய்ய எண்ணி சந்தாசாகிப் என்ற தளகர்த்தனிடம் சிறிது பொருள் கொடுத்து அனுப்பினுள். அவன் பங்காரு திருமலையையும் நாட்டை விட்டு விரட்டி தன் சகோதரனில் ஒருவனை அரசனுக்கிவிட்டு திருச்சிக்கு வந்து மீனுக்ஷியம்மாளையும் சிறைப்படுத்தினுன். அவள் சிறைப்படுத்தியதும் தற்கொலை செய்துகொண்டு இறந்தாள்.

அதன் பிறகு மகாராஷ்டிரர்கள் நமது நாட்டிற்கு வந்து முகமதியர்களிடமிருந்து நமது நாட்டை கைப்பற்றினுர்கள். அக்காலத்தில், ஆற்காட்டில் நவாப் பட்டத்தைப்பற்றி அபிப்ராயபேதங்களும் உள் நாட்டு சண்டைகளும் நடந்து வந்

தது. அது சமயம் இங்கிலீஷ்காரர் மகமதாலிக்கு உதவி செய்து மகமதாலியை கர்னாடகத்திற்கு நவாப்பாக நியமித்தார்கள். உடனே மதுரைக்கு கான்சா என்னும் ஓர் முகமதியரை கவர்னராக நியமிக்கப்பட்டது. இவர் முதலில் மிகுந்த நல்லவராக இருந்தும் பின்னால் தனக்குமேலானவர்களை எதிர்த்ததால் இங்கிலீஷ்காரர் இவரைப் பிடித்துக் கொன்றுவிட்டார்கள். இவருடைய பிரேதம் மதுரைக்கு மேற்கேயும் வைகை நதிக்கு தெற்கேயும் சமாதி வைக்கப்பட்டது. அந்த சமாதியின்மீது இப்போது பள்ளிவாசலும் கட்டப்பட்டிருக்கிறது.

அதன் பின் மைசூர் அரசனான ஹைதர் அலி என்பவ மகமதாலிக்கும் யுத்தம் நடந்தது. அது சமயம் இங்கிலீஷ்காரர் மகமதாலிக்கு உதவி செய்ய, அதற்காக சேலம், மதுரை இவைகளை இவர்களிடம் ஒப்படைத்து அதன் வருமானத்தை தாங்களே அனுபவித்துக்கொள்ளும்படி செய்தார். அது முதல் ஈஸ்டு இந்தியா கம்பெனியார்களாகிய ஆங்கிலேயர் அரசாட்சியின் புது சகாப்தம் தொடங்கியது. அன்றுமுதல் சிறிது சிறிதாக 1801ம் வருஷத்திற்குள் தென் இந்தியா பூராவும் ஆங்கிலேயர் வசம் வந்து சேர அதன் பிறகு இந்தியா முழுவதுமே விக்டோரியா மஹாராணியம்மையாரின் அரசாட்சியில் வந்து சேர்ந்தது.

## ஆங்கில அரசாட்சி

தற்சமயம் நமது இந்தியா நமது காருண்ய ஐந்தாம் ஜார்ஜ் சக்கரவர்த்தி அவர்களின் ஆளுகைக்குட்பட்டிருக்கிறது. நமது ஆங்கில அரசாட்சிக்குட்பட்ட தேசங்கள் ஒவ்

வொன்றிற்கும் ஒவ்வொரு பிரதிநிதிகளை நியமித்திருக்கிறார்கள். இப்போது நமது பிரதிநிதி டில்லியில் வசித்து வருகிறார். இந்தியா தேசத்திற்கு உட்பட்டிருக்கும் ஒவ்வொரு ராஜதானிக்கும் ஒவ்வொரு கவர்னரை நியமித்தும் இராஜதானியை பல ஜில்லாக்களாகப்பிரித்து, ஒவ்வொரு ஜில்லாவிற்கும் தலைவராக கலெக்டரை நியமித்தும் ஜில்லாக்களை பல தாலூக்காக்களாகப் பிரித்து ஒவ்வொரு தாலூக்காவிற்கும் தாசில்தார் என்பவரை தலைவராக நியமித்தும் ஆளப்படுகிறது.

இப்போது நாம் வசிக்கும் மதுரை ஜில்லாவை எட்டுத் தாலூக்காக்களாகப் பிரித்து கலெக்டரால் நமது ஜில்லாவை ஆளப்படுகிறது. கலெக்டருக்கு உதவியாக சப் கலெக்டர், டிப்டி கலெக்டர், தாசில்தார், ரேவினியூ இன்ஸ்பெக்டர், கிராம முனிசீப், கர்ணம், முதலியவர்களை நியமித்திருக்கிறார்கள்.

தாலூக்காக்களை டிவிஷன்களாகப் பிரித்து ஒவ்வொரு டிவிஷனுக்கும் சப் கலெக்டர் அல்லது டிப்டி கலெக்டர்களை நியமித்திருக்கிறார்கள். இஜ்ஜில்லாவை நான்கு டிவிஷன்களாகப் பிரித்திருக்கிறார்கள். அதாவது 1. திண்டுக்கல் டிவிஷன். 2. உசிலம்பட்டி டிவிஷன், 3. மேலூர் டிவிஷன். 4. மதுரை டவுனுக்கு தனியாக ஒரு டிவிஷன். திண்டுக்கல் டிவிஷனைச் சேர்ந்தவை:— திண்டுக்கல், பழனி, கொடைக்கானல், நிலக்கோட்டை தாலூக்காக்களும், உசிலம்பட்டி டிவிஷனைச் சேர்ந்தவை:— திருமங்கலம், பெரியகுளம் தாலூக்காக்களும், மேலூர் டிவிஷனைச் சேர்ந்தவை:—மதுரை, மேலூர் தாலூக்காக்களும் மதுரை டவுனை ஒரு டிவிஷனாகவும் ஏற்படுத்தி ஒவ்வொரு டிவிஷனுக்கும் ஒவ்வொரு டிவிஷன் ஆபீசரை நியமித்திருக்கிறார்கள். ஒவ்வொரு ஜில்லாவின் நிர்

வாகத்தை பல டிபார்ட்மெண்டுகளாக பிரித்து ஆளப்பட்டு வருகிறது. அதாவது 1. படிப்பிலாகா, 2. காட்டிலாகா, 3. தபால் தந்தி இலாகா, 4. ரெவினியூ இலாகா, 5. சுகாதார இலாகா, 6. நியாயபரிபாலன இலாகா 7. பொதுஜன மராமத்து இலாகா 8. போலீஸ் இலாகா.

படிப்பிலாகா:—பெரிய நகரங்களிலும் கிராமாந்தரங்களிலும் கீழ்தரப்படிப்பு உயர்தர படிப்பு என இருவகையான பள்ளிக்கூடங்களிருக்கிறது. இவைகளுக்கு நமது காருண்ய கவர்மெண்டார் அதிகமான பொருள் உதவிசெய்து வருகிறார்கள். இதன் அபிவிர்த்தியின் பொருட்டு டிப்டி இன்ஸ்பெக்டர், டிஸ்ட்ரிக்ட் எடிகேஷனல் ஆபீஸர், டைரக்டர் முதலியவர்களையும் நியமித்து மேற்படி பள்ளிக்கூடங்களுக்குச் சென்று உபாத்திமார்களுக்கு மாதிரிப்பாடம் நடத்திக் காட்டியும் மாணவர்களைப் பரீக்ஷித்தும் வருகிறார்கள்.

காட்டிலாகா:—நமது தேசத்திலுள்ளகாடுகள் அழிந்து போகாதபடி பாதுகாத்துக்கொள்வதற்காக இந்த இலாகாவை ஏற்படுத்தி இருக்கிறார்கள். இதில் பாரஸ்ட் ஆபீசர் முதலியவர்களை நியமித்திருக்கிறார்கள்.

தபால் தந்தி இலாகா:— அயலூர்களிலுள்ளவர்களுக்கு நாம் அனுப்பும் தந்தி, கடிதங்கள் மணியார்டர், பார்சல், முதலியவைகளை கொடுக்கவும், அங்கிருந்து அனுப்பவேண்டியவைகளை அனுப்பவும், நம்மிடம் ஏதாவது ரூபாய்களிருந்து அதை பாதுகாக்க சக்தியில்லாதிருந்தால் சேவிங்ஸ் பாங்கில் சொற்ப வட்டிக்குக்கொடுத்து வைக்கவும் வேண்டும்போது வாங்கிக்கொள்ளவுமே இந்த இலாகா ஏற்படுத்தியிருக்கிறார்கள்.

ரேவினியூ இலாகா:—நமது தேசத்திலுள்ள நன்செய் புன்செய் நிலங்களுக்கு தீர்வை வசூல் செய்தல், கண்மாய் ஆறுகுளம் இவைகள் வெட்டுதல், கெட்டுப்போகாமல் பார்த்துக்கொள்ளல் முதலியவைகளுக்காக இந்த இலாகாவை ஏற்படுத்தியிருக்கிறார்கள். இதில் ரேவினியூ இன்ஸ்பெக்டர் முதலியவர்களை நியமித்திருக்கிறார்கள்.

சுகாதார இலாகா:—ஓர் ஊரிலுள்ள ஏழைகள் நோய் வந்து கஷ்டப்படும் காலத்தில் அவர்களுடைய வியாதியைப் போக்கவும் தொத்துவியாதி பரவும் காலத்தில் அவைகளைத் தடுக்கவும் இந்த இலாகா ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இதில் அஸிஸ்டெண்ட் சர்ஜன் டிஸ்டிரிக்ட் மெடிக்கல் ஆபீஸர் முதலிய உத்தியோகஸ்தர்களை நியமித்திருக்கிறார்கள்.

நியாய பரிபாலன இலாகா:—சிவில் சம்பந்தப்பட்ட சொத்துக்களில் ஏற்படும் வழக்குகள் நிலவழக்குகள் பண வழக்குகள் முதலியவைகளை கிரிமினல் சம்பந்தமான குற்றங்களையும் விசாரித்து நியாயம் வழங்கும்படிக்கு இந்த இலாகா ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

பொதுஜன மராமத்து இலாகா:—பொதுஜனங்களுக்கு அவசியமான இடங்களில் சத்திரம், கிணறுகள், குளங்கள், பாலங்கள், ரோட்டுகள் அவசியமான சர்க்கார் கட்டிடங்கள் கட்டவும் மராமத்து பார்த்துக்கொள்ளவும் இந்த இலாகாவை ஏற்படுத்தி இருக்கிறார்கள். இதில் ஓவர்சியர், இஞ்சினீயர் முதலிய உத்தியோகஸ்தர்களை நியமித்திருக்கிறார்கள்.

போலீஸ் இலாகா:—ஊரில், களவு, கொலை, திருட்டு முதலியனவும், ராஜ துரோகமான காரியங்கள் நடைபெறாதிருக்கவும், நாட்டில் குழப்பம் உண்டாகி அதன் மூலம் தந்தி தபால் தடைபடாதிருக்கவும் பொதுவாக ஊரை பர்துகாக்கவும் இந்த இலாகா ஏற்படுத்தி இருக்கிறார்கள். இதில் இன்ஸ்

பெக்டர்ஜெனரல் டிப்டி இன்ஸ்பெக்டர் ஜெனரல் முதலிய உத்தியோகஸ்தர்களை நியமித்திருக்கிறார்கள்.

இது தவிர நமது காருண்யம் நிறைந்த துரைத்தனத்தார் இன்னும் பல நன்மைகளை செய்து வருகின்றார்கள். ஆரம்பப்படிப்பை விர்த்தி செய்தல், தர்ம ஆஸ்பத்திரிகள் வைத்தல், பழைய ரஸ்தாக்களை ரிப்பேர் செய்தல், புதிதாக ரஸ்தாக்கள் ஏற்படுத்தல், தர்மசத்திரங்கள் கட்டுதல் முதலியவைகளை கவனிக்க ஜில்லாவின் சுயஆட்சி சபைக்கு ஜில்லா போர்டு என்று பெயர். நாம் வசிக்கும் இம்மதுரை ஜில்லா போர்டு தலைமை அதிகாரிக்கு பிரஸிடேண்ட் என்று பெயர். இஜ்ஜில்லா போர்டு பிரஸிடெண்டாய் இருப்பவர் கனம் ராபர்ட் போக்ஸ் துரையவர்கள் ஒவ்வொரு தாலூக்காவிற்கும் ஒரு தாலூக்காபோர்டும் உண்டு. ஆனால் சிறிய தாலூக்காவாய் இருந்தால் அவ்விதமாயுள்ள இரண்டு தாலூக்காக்களுக்கு ஒரு தாலூக்காபோர்டு உண்டு. மேற்படி போர்டின் பிரஸிடெண்ட். தலைமையதிகாரி. யாவார். பெரிய பட்டணங்களில் முனிசிபல் சபை உண்டு. அச்சபையின் அங்கத்தினர்களுக்கு முனிசிபல்கௌன்சிலர்கள்என்றுபெயர். இச்சபையின் தலைவருக்கு சேர்மேன் என்று பெயர். இவரை மேற்குறித்த கௌன்சிலர்கள் தேர்ந்தெடுப்பார்கள். இக்கௌன்சிலர்களை பட்டணத்திலுள்ள வரி செலுத்துவோர்கள் தேர்ந்தெடுத்து அனுப்புவார்கள். நமது மதுரை டவுன் முனிசிபாலிட்டியானது 36 கௌன்சிலர்களை கொண்டது. 18 வார்டுகளை உடையது. இவ்விதமாக துரைத்தனத்தார் சில அரசியல் சீர்திருத்தம் கொடுத்தும் அன்பு நீதியுடன் அரசாண்டுவரும் நமது ஐந்தாம் ஜார்ஜ் சக்கரவர்த்தியும் அன்னவருடைய அருமை மனைவி மேரி மகாராணியும் அவர்கள் சுற்றத்தார்களையும் இன்னவர்கள் நிர்வாகங்களை நீடுழிவாழ கடவுள் திருவருள் புரிவாராக.

---

முற்றிற்று.

21/95 N30